கடவுள்துணை.

# மதுரைத்

# தமிழ்ச்சங்க மான்மியம்.

இது

பரம்பக்குடி மகா-௱-௱-ஸ்ரீ

ம. ப. இராமசாமிமுதலியாரவர்கள்

விருப்பத்தின்படி

இளையான்குடி மா௱ ஸ்பெஷல் மாஜிஸ்திரேட்டும்

சோதுகுடி சாத்தனக்கிராமம் அஃதாருப்

மதுரைத் தமிழ்ச்சங்க வித்துவான்களி லொருவருமாகிய

ஸ்ரீமாந்

M. K. M. அப்துல்காதிறுராவுத்தர் அவர்களால்

இயற்றப்பெற்று

இளையான்குடி ஸ்ரீமாந்

சு. வெ. அழ. நாகசாமிசெட்டியாரவர்களால்

மதுரை:

விவேகபாநு முத்திராசாலையிற்

பதிப்பிடப்பெற்றது.

1907

*Copy Right Registered*

கடவுள்துணை.

# மதுரைத்
# தமிழ்ச்சங்கமான்மியம்.

7876.

இது
பரம்பக்குடி மகா-ள-ள-ஸ்ரீ
ம. ப. இராமசாமிமுதலியாரவர்கள்
விருப்பத்தின்படி

இளையான்குடி மாஜி ஸ்பெஷல் மாஜிஸ்திரேட்டும்
சோதுகுடி சாத்தனிக்கிராமம் அஃதாரும்
மதுரைத் தமிழ்ச்சங்க வித்துவான்களி லொருவருமாகிய
ஸ்ரீமாந்
M. K. M. அப்துல்காதிறுராவுத்தர் அவர்களால்
இயற்றப்பெற்று.

இளையான்குடி ஸ்ரீமாந்
சு. வெ. அழ. நாகசாமிசெட்டியாரவர்களால்

மதுரை:
விவேகபாநு முத்திராசாலையிற்
பதிப்பிடப்பெற்றது.

1907

Copy Right Registered.

மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை-600090.

# PREFACE.

OF the 29 Vernaculars that are extant in our Presidency, Tamil occupies the foremost place with about 40 per cent ($15\frac{1}{2}$ millions) of the population of the Presidency speaking it. It is highly interesting to note that of the literate population of this Presidency, 55 per cent are literate in this language. Its high antiquity and its rich classics often excite the admiration of the world and the Tamilian always feels highly proud and delightful, whenever mention is made of his noble mother-tongue. It is the only Vernacular which was carefully cultivated for many centuries by its wisest scholars with all the artistic niceties in the three ancient Sangams of renown. The work before us, as the import of its name implies, deals not only with the glory of those three ancient Sangams, but also that of our fourth Sangam, presided over by that veteran scholar and noble philanthropist, Mr. P. Pandi Durai Tevar, the Zemindar of Palavanattam. The author of this interesting poetical work is Mr. M. K. M. Abdul Kadir Rowther, the young and cultured Muhammadan Mirasdar of Sodukudi Sattani, the late Special Magistrate of Elayangudi and an undergraduate of the Calcutta University.

As far as I am aware, he is the only English-knowing Muhammadan gentleman who has cultivated Tamil to an eminent degree and is one of the three Muhammadan Pandits that belong to the present Sangam. His deep devotion to Tamil, his unbounded sympathy for every thing Tamil and above all, his highly polished manners and his sweet and amiable temper have endeared him to one

and all the Pandits of the Tamil land. The work, containing 186 stanzas of *Viruttam* metre, was read before the assembly of Pandits during the last Anniversary of the Sangam and approved of by them. Their certificates about the merit of this work have been attached to the work and they would speak for themselves.

The style adopted is free and flowing and the ideas enshrined in the stanzas are high and dignified. The variety of metres employed by the author and the various technicalities used, bear testimony to his intimate acquaintance with the intricate rules of the *Porul Ilakkanam* and to his able scholarship.

It is hoped that many English-educated young men would follow the patriotic example set by our author and try to elevate our sweet and noble mother-tongue with all possible love and attention.

MADURA
8—5—07

*S. Swaminatha Aiyar,*
JOINT SECRETARY,
*Madura Tamil Sangam.*

# சாற்றுக்கவிகள்.

இது
சென்னை பிரவிடென்ஸி காலேஜ் தலைமைத் தமிழ்ப்
பண்டிதர் ப்ருஹ்மஸ்ரீ
மகாமகோபாத்தியாயர்

## உ. வே. சாமிநாதையர் அவர்கள்

இயற்றியது.

---

புண்ணியன் பாண்டித் துரைமகி பாலன்
புரந்தளித் திடுமொரு பெருமை
நண்ணிய கூட னகர்த்தமிழ்ச் சங்க
நலத்தினை யியற்றமிழ் வாணர்
எண்ணிய விருந்தா வுண்ணிய வாய்ந்தே
யின்றமிழ்க் கவிகளா லிசைத்தான்
கண்ணிய னெவர்க்கு மண்ணிய னப்துல்
காதிறு ராவுத்தக் கவியே.

---

இராமநாதபுரம் சேதுசம்ஸ்தான வித்துவான்

## ப்ருஹ்மஸ்ரீ. ரா. இராகவையங்காரவர்கள்

இயற்றியது.

உமருப் புலவ னுயர்கவியின் யாரு
மமர்விற் புகழ்ந்திசைப்ப தாகுங்—குமரித்
தமிழத் துருக்கர் தனிக்குடியான் கல்வி
கமழப்புல் காதர் கவி.

---

ஸ்ரீ:

மதுரைத் தமிழ்ச்சங்கம் 'செந்தமிழ்'ப் பத்திராசிரியர்

## ப்ரும்மஸ்ரீ மு. இராகவையங்காரவர்கள்

## இயற்றியவை.

---

விண்கொண்ட மாமலைய வெற்பின் முனிமுதலா
எண்கொண்ட மேலோர் எடுத்து வளர்த்ததமிழ்ப்
பண்கொண்ட பாவையினைப் பாலூட்டிப் போற்றியவை
மண்கொண்ட கீர்த்தி மலிசங்க மூன்றன்றே. (க)

இத்தகைய சங்கமொரு மூன்ற னியல்பெல்லாம்
உய்த்தறிந்து முன்னூல் வழியே யுரைத்துமுளச்
சுத்தமுறு பாண்டித் துரையெங்கோன் தொன்மதுரை
வைத்துமகிழ் சங்கத்தின் மாட்சிதனை வகுத்தும். (உ)

சங்கமான் மியமென்னத் தக்க தொருநூலை
அங்கண்மா ஞாலத் தவர்விரும்ப ஆக்கினனால்
துங்கமார் தென்பாண்டிச் சோது குடித்தலைவன்
நங்கணு ரன்பனப்துல் காதிறுநன் னாவலனே. (ங)

---

மதுரைத்தமிழ்ச்சங்கம் செந்தமிழ்க்கலாசாலை உபாத்தியாயர்

## ப்ரும்மஸ்ரீ. வித்துவான்

## சுந்தரேசுவர ஐயரவர்களியற்றியது.

---

தன்மதுரை யாமெங்க ளுக்கிரபாண் டித்துரையாற்
றாபித் தோங்குந்
தென்மதுரைத் தமிழ்ச்சங்க மான்மியமென்
றொருபெருநூல் செப்பி னானால்
நன்மதுவார் பொழிற்சோது குடிநகரான் பாவலர்க்கு
நயனம் போல்வான்
இன்மதுர மொழியாள னப்துல்கா திறுவென்னு
மிசைவல் லோனே.

பண்டிதர்

## பி. ஆர். கிருஷ்ணமாசாரியாரவர்கள்

## இயற்றியது.

பாரியை யோரி யோரியைப் போலப்
பாவலர்க் கிருநிதி பொழியுந்
தாரியை தருவே யெனத்தருப் போல்வார்
தமைப்புகழ் வழக்கினைத் தவிர்த்துச்
சீரியை கவியாற் செந்தமிழ்ச் சங்கஞ்
சிறந்தமான் மியம்புகழ்ந் துயர்ந்தான்
பேரியை யப்துல் காதிறு நாமம்
பெற்றநற் கவிஞர்கோ மானே.

இது

தஞ்சாவூர் வீநியர் வெற்றெறிநெறி அஸிஸ்டெண்டு ஸ்ரீமாந்

## வெ. ப. சுப்பிரமணிய முதலியாரவர்கள்

## இயற்றியது.

தேமதுரைத் தண்மொழியான் சோதுகுடி அப்துல்கா
திறரா வுத்தன்
சேமதுரைத் தனத்தவரால் விசேடநீ திபதியெனச்
செய்யப் பெற்றோன்
யாமதுரைத் தலுக்காற்ற விலமென்றியா வருமிதுகா
றியம்பி டாத
மாமதுரைத் தமிழ்ச்சங்க மான்மியஞ்சொற் றனன்கவிஞர்
மகிழு மாறே.

௨

மதுரைத் தமிழ்ச் சங்கம் நூற்பரிசோதகர் ஸ்ரீமத்

## மு. ரா. அருணாசலக்கவிராயரவர்கள்

இயற்றியவை.

---

முத்தமிழ்க்கு மூன்றென்ன முடிந்தசங்க நாற்கவிக்கு
முந்து நான்கா
மித்தரையி லெனவிளம்ப வியலிசைநா டகவரம்பி
னெல்லை கண்ட
வுத்தமனு கியபாண்டித் துரைமதுரை மாநகரி
லுவந்து தாபித்
தெத்தலமு மிசைபரப்பி வைத்தனனா லிவன்பெருமை
யிசைப்பார் யாரே. (௧)

அன்னசங்கப் புலவர்களு ளொருவனுங் கல்வியறி
வடக்கம் வாய்மை
பன்னரிய பொறையொழுக்க மீகையுப காரமுதற்
பண்பு வாய்ந்த
மன்னர்புகழ் சோதுகுடி வாழப்துல் காதிறுவாம்
வள்ள லென்போன்
சொன்னயமும் பொருணயமு மொன்றையொன்று வெல்லுமுயர்
துதிபெற் றோங்க. (௨)

சங்கமான் மியமென்னச் சிறந்தவொரு பெருந்தமிழ்நூ
றழைப்பப் பாடி
யெங்கண்மா நிதியமெனக் கற்றவரெல் லாங்குழீஇ
யேற்றுக் கொள்ளத்
துங்கமார் சபையிலரங் கேற்றினா னந்நூலின்
சுவையுட் கொண்டோ
ரங்கண்வா னமரருந் தமுதினையும் வேண்டற்பாற்
றன்றென் பாரே. (௩)

மதுரை விவேகபாநுப் பத்திராதிபர்

## ஸ்ரீமத். மு. ரா. கந்தசாமிக்கவிராயரவர்களியற்றியவை.

---

செயற்கரிய வெனுங்குறளுக் கிலக்கியமாக் கடலுடுத்த
தேய மெல்லா
நயக்கும்வகை நம்மதுரைத் தமிழ்ச்சங்கந் தனைநிறுவி
நாவல் லோர்கள்
மயக்ககல விருபொருளும் வழங்கியறி வுடையரெலா
மதிக்க வாழும்
புயற்குநிகர் முதற்கவிகை யுக்கிரபாண் டியநாமம்
புனைந்த மேலோன். (க)

பொருந்துபுக ழறியாதா ரிலரன்றே யிவன்றலைமை
பூண்டு காக்கத்
திருந்துமிந்தத் தமிழ்ச்சங்க மான்மியமோர் நூலாகச்
செய்வா யென்ன
விருந்துநலம் பெறுபரம்பை நன்னகரின் மதிவலியான்
மேன்மை யான்சீர்
தருந்துளப மானிகர்த்தா னெனும்ராம சாமிப்பேர்த்
தக்கான் வேண்ட. (உ)

சோதுகுடி வாழ்வுடையான் கலிங்கிமீ ருன்கனிப்பேர்ச்
சுகுணன் செல்வன்
வாதுகுடி லஞ்சினமில் லாதுநட்பு நீதிபொறை
மருவி ஞேன்பூ
மாதுகுடி கொண்டிருக்கும் வாழ்வுடை யான் றமிழ்ப்புலவர்
வறுமை யெல்லா
மேதுகுடி யிருப்பினியென் றேகும்வகை பொன்மழைபெய்
திலங்குங் கையான். (ந)

ஆங்கிலமன் னவருவந்து மாட்சிமைசேர் நீதிபதி
யதிகா ரத்தைப்

பாங்குபெறத் தரக்கோண்டோன் பசுந்தமிழ்நூல் பலதெளிந்து
பாச்சொல் வண்மை
யோங்கிநன்னூல் பலசொற்ருேன் அப்துல்கா திறுநாம
னுவந்து கூறி
வீங்குபுகழ்த் தமிழ்ச்சங்கத் தரங்கேற்றிப் புலவரெலாம்
வியக்கச் செய்தான். (ச)

அன்னநூற் சுவையையறிந் திளசைநகர் வணிகர்சிகை
யணியே யாக
மன்னுதனங் குணங்கல்வி வாய்மைபொறை திறலன்பு
வண்மை யாவுந்
துன்னியொரு வடிவெடுத்தா னிகர்நாக சாமியெனுந்
தூய னிந்நா
ணன்னரெழு தாவெழுத்தி னிட்டளித்தா னிதன்பெருமை
நவிலற் பாற்றோ. (ரு)

---

திரிசிரபுரம் எஸ். பி. ஜி. காலேஜ் தமிழ்ப்பண்டிதரும்
தமிழ்ச்சங்க வித்துவான்களிலொருவருமாகிய
**ஸ்ரீமத் பிச்சையிபுருஹீம்புலவரவர்களியற்றியது.**

கொற்றவர்சேர் சோது குடியப்துல் காதிறுநூல்
கற்றவன்யாங் கேட்டளவிற் கல்விவளமுற்ற
மதுரைத் தமிழ்ச்சங்க மான்மியத்தைச் சொற்றுன்
முதுமைத் தமிழின் முடித்து.

---

மார்க்கயன்கோட்டை வித்துவான் மகா-ா-ா-ஸ்ரீ
**எம். பி. பழனிச்சாமியாசாரியாரவர்களியற்றியவை.**

---

பொன்னாளும் வெண்சலசப் பூவாளுந் தனதகத்திற் பொருந்த வீர
மின்னாளும் புயத்திலங்க விரைநாளக் கமலமுக விளக்கம் பூண்டு
பன்னாளுங் குடிமகிழப் பாராளு மரசிருக்கை படைத்த மேலோ
னென்னாளு மென்னுடனட் பியலாளக் குறித்துமனத் திசைதயாளன்

வாதுகுடி புகுந்தமன மார்தருமிவ் வேந்தனடி
வணங்கி லோமே
லேதுகுடித் தனமக்கிங் கியலாதென் றெண்ணிநண்ணி
யிறைஞ்சுந் தாளான்
தாதுகுடி கொளுமாலைத் தடந்தோளா னிடம்பெறுதண்
டலைசூழ் செல்வச்
சோதுகுடி யெனுமணிசேர் தொன்னகருக் கணியாகத்
துலங்கி வாழ்வோன் (௨)

நன்னிருபர் சபாமணிசொன் னுவலர்சி காமணிபுண்
ணையாய் நட்டோ
ரின்னிருத யாசனமால் கலிங்கிமீ றுன்கனிப்பே
ரிறைவன் போற்றி
முன்னிருந்த பெருந்தவத்தாற் புத்திரசிந் தாமணியாய்
முன்னர் வந்தோன்
என்னிருகண் மணியனைய வேந்தலப்தூல் காதிறெனு
மிறைவன் மன்னே. (௩)

பொங்கமுறும் வடமொழிதென் மொழியாங்கி லேயமொழிப்
புலவர் போற்றுஞ்
சிங்கமெனுந் தருமதுரைச் செழியன்போற் றருமதுரை
செழிக்கும் நான்காஞ்
சங்கமகத் துவமதனைத் தமிழ்ப்பாவா லியற்றியிசை
தானுற் றுனல்
மங்கலஞ்சே ரந்நூலின் மாண்பினுக்கா முவமையின்றே
வகுத்தற் கம்மா. (௫)

---

மதுரைத் தமிழ்ச்சங்க வித்துவான் கீழக்கரை மகா-௱-௱-ஸ்ரீ
## மறிய ஜோஸப் உடையாஸ் அவர்களியற்றியவை.

நிலம்புகழுஞ் சேதுபதி குலப்பாண்டித் துரைவேந்த
னிதமு மிந்தத்
தலம்புகழும் படிநிறுவுந் தமிழ்ச்சங்க மான்மியமாந்
தமிழ்நூல் கற்றுர்
குலம்புகழப் புகலுகெனப் பரம்பை ராமசுவாமிக்
குரிசில் வேண்ட
வலம்புகழ வளர்சோது குடியிலுறை பெருங்கல்வி
மாண்பு கொண்டோன். (க)

உத்தமசற் குணசீலன் பொறையறிவு கொடை வலிமை
யூக மேவும்
வித்தகனு மெங்களப்துல் காதிறுநாவலன் புலவர்
வியக்கச் சாற்றி
யத்தகுநற் றமிழ்ச்சங்கத் தரங்கேற்றி யிசைதிசைக
ளனைத்து மேற்றி
வைத்தனன்சீர் பெறுநாக சாமிவள்ள லச்சேற்றி
வாழ்குற் றேனே. (உ)

---

மதுரைத் தமிழ்ச்சங்க வித்துவான் கீழக்கரை மகா-ள-ள-ஸ்ரீ
## பா. பு. ச. சுல்தான் அப்துல்காதிறுபுலவரவர்கள்
இயற்றியது.

அருக்கரையுங் கடந்துசெலும் பொழிற்புடைசூழ் சோனகுடி
யடுக்கும் வித்வ
வருக்கரையன் பெரும்புரப்போன் அப்துல்கா திறுபொதிய
வரனு நாணி
யுருக்கரையும் படிமதுரைத் தமிழ்ச்சங்க மான்மியநூ
லுரைத்தான் கன்னற்
சருக்கரையுந் தேம்பாகுஞ் சாரமுது மிதற்கிணைபோ
சாற்றுங் காலே. (க)

---

கீழக்கரை வித்துவான்
## ஸ்ரீமத். செய்யது ஆலீம் புலவரவர்களியற்றியது.

நன்பளிக்கு நிகர்மனத்தான் அப்துல்கா திறுசிங்கம்
நாவின் வாணி
யென்பளிக்கு ரசமிதெனத் தமிழ்ச்சங்க மான்மியமா
மியனூ லியார்க்கு
மின்பளிக்கும் படியிசைத்துப் புகழ்படைத்தான் கல்விகல்லா
ரெவரு நம்மை
முன்பளிக்கு வைத்திலரே யெனநாணிக் கற்பதற்கு
முடுகு மாறே. (க)

---

இளையான்குடி ஆயுள்வேத பாஸ்கரரும் வித்துவானுமான
மகாராஜஸ்ரீ பண்டிதம் காதிறுபாவா அவர்கள் குமாரரும்
இந்நூலாசிரியரின் மாணாக்கருமாகிய மகா-ள-ள-ஸ்ரீ பண்டிதம்
செய்யதப்துல்காதிறு அவர்களியற்றியது.

---

மன்னவன் பாண்டித் துரைமகராஜன் வளர்த்திடு
 செந்தமிழ்ச் சங்க
மான்மிய நூலைப் புகல்கெனப் பரம்பை மருவிய
 ராமசுவாமி
முன்னவன் வேண்டக் கன்னலின் ரசமோ முக்கனி
 முதிர்தரு சுவையோ
முதுதமிழ்க் கடலி லெழுந்ததெள் ளமுதோ மொழியலா
 மூவமை யென்றெவரும்
பன்னவே சோறு குடிபுமென் னுளமும் பண்புற
 விருந்துநன் றுற்றும்
பாக்கியக் குரவன் அப்துல்கா திறுவாம் பண்டித
 சிகாமணி பகர்ந்தான்
அன்னதை யிளசைப் பதியுறை சீயா னாகிய
 நாகசா மிப்பேர்
அண்ணலச் சிட்டுத் திகழ்ந்தன னிந்நூ லணிநலஞ்
 சொலற்கெளி தன்றே. (க)

---

மதுரைஜில்லா கோம்பை நகரம் வித்துவான் மகா-ள-ள-ஸ்ரீ
க. திருமலைச்சக்கயகவுண்டரவர்கள்
இயற்றியது.

உடுமலிவிண்போழ்ந் தடுதொழின்மும்மத
வெளிறுநான்மருப்புக் களிறுடைமகவா
னனைதுணர்பிலிற்றுபூஞ் சினையகற்பகத்திடைப்
புக்காங்கசையா வக்காநிழல்வதி
விலோவெனுநன்னுதற் புலோமசைதனக்குச்
சசியென்றொருபெய ரிசைதலினவடனைப்

பற்றவாயதோ ரற்றநோக்கா
வெயில்விடுகூர்வா ளெயிறுதோன்றத்
தீயநஞ்சுகுபேழ் வாயங்காப்புறு
காதுவெங்தொழிற் கேதுவாமரவெனத்
தெள்ளுபூம்பாளை விள்ளுறவலர்ந்து
மெழினீள்பூகப் பொழில்பலமல்குருச்
சுந்தரர்கயற்கண் ணந்தரியருண்மிக்
கனவரதமுமுயர் பனவராரண
(நேமமதுரை வாமமதுரை
வழிவழியரசுசெய் செழியர்தந்நாம
கிரந்தரஞ்சூட்டிப் புரந்தருள்செயுமிப்
பாண்டிநன்னாடு வேண்டியாங்குபன்
னலங்களுமெய்தப் புலங்கொணல்லாறு
தென்சொலாய வின்சொலேய்தமிழ்ப்
பைங்கூழ்வளர்த்தலே நங்கோளிதுவென
நனியுணர்ந்தங்க ணினிதுகடைப்பிடீஇ
யான்றமுச்சங்க மூன்றமுத்தென்று
நடைபெறச்செய்தது மிடையினிலூழிக்
கடுங்காலன்ன கொடுங்கோன்மன்னராற்
சீரழிந்தவ்வவை பேரழிந்தொழிதலு
மீட்டுமச்சங்க நாட்டுமருஞ்செயல்
காண்டகுசீர்மைப் பாண்டியப்பெயரினை
யல்லாதார்க்கிங் கொல்லாதாதலி
னப்பெயர்தாங்கி மற்புயமள்ள
ருழுபடைச்சாலுறு மெழுநித்திலத்திரண்
மாண்டபூமகளுடல் கீண்டபுண்வழிவரு
கொழுமைமானக் கெழுமுதண்பணைமலி
கோதகவிராம நாதபுரத்திநேர்
திலதமாயுதித் திலகுதிராவிட
மறையொடாகமமெலாங் கறைதபவுணர்ந்து)
நயன்றருதொல்காப் பியங்காண்டிகைமுதற்
பேரிலக்கணமாம் வாரிமிசையாக்

சத்திபாகன்மெய்ப் பத்திமிக்குற்றத்
தேனதனின்மிக்க கனதனம்படைத்து
விரிக்கருநலனெலாந் தரித்துயரசலமேன்
மிளிர்சுடர்போல நளிர்கடலுலகெலா
நிறைசீர்பரப்பு மறைபொலன்கழற்கால்
தரைபுகழ்பாண்டித் துரைபெம்பெருமான்
இன்னகுறையினை நன்னருணர்ந்து
மண்டலத்தவர்கள் பண்டையினுய்யப்
புங்கமார்நான்காஞ் சங்கமென்னுந்
தண்புழனத்தினைப் பண்புறவமைத்து
நிரம்பியவொழுங்காம் வரம்புதிருத்தித்
தாழாமுயற்சியா மாழியநீர்நிறைத்
தோங்குதெள்ளுரை தேங்குசெந்தமிழ்
வித்தையெனுநல் வித்தைவிதைத்துத்
தளையிடையூறுங் களைகட்டாற்றிக்
கிளைநன்னலமெனும் விளைபொருண்மல்கி
யிருங்கடன்ஞால மொருங்குதுய்த்துய்யச்
செய்ததும்புவி நல னெய்துவான்றமிழ்ச்
சங்கமான்மியப்பெயர் தங்கவோர்நூலா
வனைந்தருளென்னப் புனைந்தசீர்முத்த
னேந்தலினின்றும் சேர்ந்தபங்கயத்தடப்
பரம்பக்குடிவள நிரம்பக்குடியாப்
போந்தவன்கலை முழு தாய்ந்துணரறிஞன்
நந்தலில்லடற்செங் குந்தமாமரபினன்
காண்டிபன்பழநி யாண்டிமாலன்பர்
நயந்தவச்சுதனெனப் பயந்தவச்சுதன்
பீடார்துலைநாக் கோடாதிம்பியுங்
கரவிலார்துளுற்றும் பிரபலமளிகை
வாணிபநாதனைப் பூணியல்மார்பன்
தேமிசையிராம சாமிவேள்நச்சலின்
மெத்தியதீஞ்சொற் பத்தியரூபமாப்
பயனுறவியற்றுபு நயனுறவளித்தனன்

ததும்புதேன் புன்னையம் பொதும்பர்சூழ்தரவி
ணடரிருளிரியச் சுடர்வெண்மணிகளைத்
திரைதொறுங்கொழித்து மரைமலர்வாவிசூழ்
கடிகமழ்சோழ குடிநன்கோம்புவோன்
விரவளிமுரல்தண் மரவமென்றொடையினன்
ஒருவானவன்கழ லொருவாவுளத்தன்
கன்னூலாய நன்னூலேனைத்
தொன்னூன்முதல கொன்னூனிறைகடல்
மமதையொடுவரு மமதையறியான்
மாதர்விழைவுறு மாதர்மிக்காணிதித்
தனதனைவர்க்குந் தனதன்சஞ்சித
பவந்தவிர்த்தாரு நவந்தருமதுரைநாற்
சங்கமால்தங்கவோ ரங்கமாய்மங்கல
வளையார்வயல்செறி யிளையாங்குடிஸ்பெஷல்
மாஜிஸ்திரேட்டாய்ப் பூஜிதைபெறுபொன்
மங்கைவாழ்வுறுசிவ கங்கைதாலூகா
போர்டுமெம்பராப் பூர்த்திசேரின்ன
வுயர்முப்பதவிகொ ணுயவிற்பனன்விரி
மண்கொளாதுயர் விண்படர்சீர்த்தியான்
மேவலர்பழிச்சு நாவலர்பெருமான்
நீதிசெயப்துல் காதிறு
கண்யமீக்கூர் புண்யபுமானே!

# சிறப்புப்பாயிரம்.

இது

*நாகூர் தர்ஹா மஹாவித்துவானும் நாகூர் வித்வஜ்ஜன சேகரரும்*
*மதுரைத் தமிழ்ச்சங்கப்புலவர்களிலொருவருமாகிய*

**ஸ்ரீமத். வா. குலாம்காதிறு நாவலரவர்களியற்றியது.**

பொன்னாடும் புனனாடும் பெண்ணாடு மறைபரொடு புகழ்விடென்னும்
இன்னாடும் பெருந்துறவார் நடுநிலையா ரிம்மூவ ரிருக்கையாகித்
தென்னாடும் வடநாடு மேனாடுங் கீணாடுஞ் செழிப்பான் றேன்ற
பன்னாடும் விழைந்துறுகற் பகநாடும் புகநாடும் பாண்டி நாட்டில். (௧)

சுரும்பழனத் துபுமிழ்ந்த தெனக்காந்த ளிடைக்காண்டு
துயர்கூர் மந்தி
பெரும்பழனத் துறத்தூங்கு கிளைவயிற்போய்க்
கைநெரித்துப் பிரியாவாற
மரும்பழனத் துயர்நகரம் பலவுள்ளு ணனிசிறந்த
மதுரை யென்னும்
அரும்பழனத் துறத்தமிழ்வித் துபுவளர்த்திவ் வுலகுமிசை
யலர்த்தல் வேண்டி. (௨)

மூவகைய வத்தமிழே யினிதுபயி ராமரிய
முறைமை தேர்ந்து
மூவகைய வித்தூன்றி வழுதியராந் தமிழுழவர்
முன்ன ரோம்பு
மூவகைய சங்கத்தா னாதரிப்ப விருந்தின்ன
மூன்றும் பின்றை
மூவகைய வாயொழிப் பின்னருமாங் கதுவளர
முயன்ற மன்னே. (௩)

குடமுனியும் பிறருமுயர் பாண்டியரு மோருருவங்
கொண்ட ராகின்

படமுனியும் பேரல்குற் பாவையர்மால் கொளமாரற்
பழித்துத் தோன்றிக்
கெடமுனியும் படர்கரையே திரைக்குமரி யாள்பதிகள்
கீர்த்தி யோங்க
மடமுனியும் பேரறிஞ னெனப்புலவர் சிரந்தாழ்த்த
வந்த பூமான். (ச)

கெழுமியசீர் முகவையாள் பவன்பொன்னுச் சாமிதவங்
கிளர்ந்த மைந்தன்
தொழுமியலா னுயர்பாண்டித் துரைத்தேவன் மதுரையெனத்
தொல்லூர் தன்னிற்
குழுமியவே பன்னாட்டுப் பெரும்புலவ ரொருங்கிருந்தக்
குறைவு தீர்ப்ப
விழுமியநான் காஞ்சங்க நின்றுநில வியசெய்த
மேன்மை காண்டு. (ரு)

ஒருமுத்த னேந்தலிடைப் பூர்வத்து வாழ்ந்ததற்பி
னுயர் பரம்பை
வருமுத்த னேந்தலிடை குணப்பழனி யாண்டியருள்
மகவாய் மெய்வார்
பெருமுத்த னேந்தலிடை யுறுராம சாமியெனப்
பெயர்கொண் டோங்கும்
பருமுத்த னேந்தலிடை யொன்றுநூல் செய்கென்று
பரிந்து கேட்ப. (சா)

திருமதுரைத் தமிழ்ச்சங்க மான்மியமென் றொருநூன்மன்
செப்திட் டன்ன
பொருமதுரைத் தமிழ்ப்புலவர் நடுவணரங் கேற்றினனிப்
புவன மெங்குந்
திருமதுரைத் தமிழ்ப்புலவ பெருங்குடியோய்
பெரும்புகழோய் தனிக சான்ற.

பெருமதுரை மாரெல்லாங் கொண்டாடு வோமெனச்சொல்
பெருமை வாய்ந்தோன். (எ)

கனியருளும் பொழிற்சோது குடிபுரக்கும் பெருஞ்செல்வக்
கலிங்கி மீருன்
கனியருளும் பாலருட்சி ரேட்டனுய்ப் பேரன்பு
கால மால்கொள்
கனியருளும் பலனுடையா டவருள்ளுங் குடியிருப்பக்
கவினி யோன்வாய்க்
கனியருளும் பாவல்ல னுவல்ல னுனவப்துல்
காதி றன்றே. (அ)

அந்தரத்துப் புலவாமு துளதெனுஞ்சொன் மொழியளவே
யா நூல் வல்லோர்
தந்தரத்துக் கிசையமிசை யமுதாமிந் நூற்பெருமை
தனை நன் கோர்ந்து
மந்தரத்துப் புயனிளசை வளர்நாக சாமியெனு
மாறன் செல்வச்
சுந்தரத்துக் கேற்றவிதத் தச்சிடுவித் துலகெங்குந்
துலக்கி னனே. (கூ)

சிறப்புப்பாயிரம் முற்றிற்று.

# முகவுரை.

இம்மதுரைத் தமிழ்ச்சங்கமான்மிய மியற்றினோர் இளையான்குடிக் கடுத்த சோதுகுடிக்கிராமம் அக்தாரும், கலிங்கிமீருன் கனிராவுத்த ரவர்கள் குமாரரும், மாஜிஸ்பெஷல் மாஜிஸ்திரேட் அதிகாரம் புரிந்த வருமாகிய அப்துல்காதிறுராவுத்தரென்பவரே.

இவர் ஆண்டிலிளையவராயினும் அறிவின் முதியராய் அரியசெந் தமிழ்நூல்களை ஆராய்தலையே விநோதமாகவுடையார். இவரது ஆரா ய்ச்சித்திறம் இந்நூலைப் பார்த்தறிபவர்கட்கு நன்கு விளங்கும்.

இந்நூலைப் பலதரமும் படித்துப் பார்க்கவே ஆங்காங்குள்ள சொன்னயங்களும் பொருணயங்களும் அணிநயங்களும் பார்க்கப்பார் க்க மிகமகிழ்ச்சியை விளைக்கின்றன. நாட்டுச்சிறப்பு நகரச்சிறப்புக் கவிகண் முதலியகவிகளின் கற்பனைகளை நோக்குங்கால் இவர்பெருங் காப்பியஞ்செய்தற்கும் வல்லவராவரென்பது நன்குவிளங்குகின்றது.

முத்தமிழ்ச் சங்கமான்மியத்தைச் சங்கிரகமாகக்கூறி யிருப்பி னும் அக்கவிகளை உற்றுநோக்குங்கால் அவைகள் தக்கவாறு பொரு ளமைதியு முடையனவாயிருக்கின்றன.

நான்காஞ்சங்க மான்மியத்திலே மாட்சிமைதங்கிய சேதுபதியர சர்கள் பரம்பரை விளக்கமும் அவர்களுடையவீரஞ் செல்வங் கல்வி கொடைமுதலியனவும் இக்காலத்திற் பெருவள்ளலென்றும் பெருங் கல்விமானென்று மிவ்வுலகம் வியந்துகொண்டாடப்பெற்ற பாற்கர சேதுபதியென்னுமரசர்பெருமான் பெரும்புகழ்ப்பிரதாப வரலாறு களும் அந்நாளிருந்த உக்கிரபாண்டியனே இந்நாளில்அமிழ்தினுமினிய செந்தமிழை வளர்ப்பான் அப்பெயர் மாற்றுதவதரித்தனனென்று அறிவுடையார் மதிக்கப்பெறுகின்ற நான்காஞ்சங்கத்து அக்கிராசனு திபதியவர்களின் கல்வித்திறமை பரோபகார முதலியகுணங்கள் யாவும் இந்நான்காஞ் சங்கத்தை யமைத்ததற்குக் காரணமும், இச்சங் கத்தை வித்துவக்கழகம், சேதுபதிசெந்தமிழ்க்கலாசாலை, பாண்டியன்

புத்தகசாலை, முத்திராசாலை, செந்தமிழ்ப்பத்திரிகை, செந்தமிழ்ப் பரீட்சை, தொன்னூலாராய்ச்சி ஆகிய எழுவகையங்கமுடையதாக்கி யென்றும்நடைபெறச் செய்தவிதமும், அங்ஙனமேநடைபெறுமாறு, வியந்து பொருளுதவிசெய்த பெருந்தகையோர் விவரமுஞ் சிறப்பித்துக் கூறியிருக்கின்றார்.)

இத்தகைச் சிறப்புற்ற இந்நூலை யொருதரம் படித்தோர் கேட்டோர் பின்னும் படிக்கவுங் கேட்கவும் அவாவுறுவ ரென்பதற் கையமில்லை.

இந்நூலியற்றினோர் மகமதியராயிருந்துஞ் செந்தமிழறிவின ராய் விருப்புற்றிங்ஙனங் கூறிய இந்நூலை முழுவது நோக்கி மகிழ்ந்து சங்கத்தமிழை யறிந்தவர்களும், அபிமானம் புரிவோர்களுந் தெரிந்து மகிழ்ச்சியடையவேண்டுவது முக்கியமாயினதென்று கருதிப் பரிசோதித்து, கடவுள் வாழ்த்துக்கவியின் பொருளமைதிவிளங்க அதற்குரையும், ஏனைய கவிகளிற் சில அரும்பதங்கட்குரையும் வரைந்து வெளியிடலாயினது.

இங்ஙனம்.

சே. ரா. சுப்பிரமணியக்கவிராயர்,

சைவநூற் பரிசோதகர்,

மதுரைத் தமிழ்ச் சங்கம்.

கடவுள் துணை.

# மதுரைத் தமிழ்ச்சங்க மான்மியம்.

## காப்பு.

மறையினு மறைந்து மேம்பா டெய்தினோர் மனத்தின் காட்சித்
துறைதொறும் விளங்கி யென்றுந் தோற்றமு மீறு மில்லான்
குறையிலா னுயர்ந்தோ னென்று கொண்டுநல் லுலகம் போற்று
மிறையரு ளரணம் புக்குப் புகலென விறைஞ்சு கிற்பாம். (௧)

### இவ்வாசிரியவிருத்தத்தினுரை.

மறையினு மறைந்துமேம்பா டெய்தினோர் மனத்தின்காட்சித் துறைதொறும் விளங்கி--வேதத்தினிடத்தும் மறைவாகிநின்றுமேன்மையடைந்த பெரியோர்களினகக்காட்சியிற் காணுமிடங்களெல்லாம் விளங்குதலுடையவன், என்றுந்தோற்றமு மீறுமில்லான்—எப்பொழுதுமிறப்பும் பிறப்புமில்லாதவன், குறையிலான்—பூரணமாயிருப்பவன், உயர்ந்தோன்—மேலானவன், என்றுகொண்டு நல்லுலகம் போற்றுமிறை—என்றிவ்வாறு கருதி நல்ல வுயர்ந்தோர்களாற் றுதிக்கப்படுமிறைவன், அருளரணம்புக்கு—அவனதருளாகிய அரணகத்துச் சென்று, புகலென விறைஞ்சுகிற்பாம்—அவனே தஞ்சமென்று வணங்குவாம் (யாம்) என்றவாறு.

இரகசியார்த்தங்களை யுடைமையால் மறை எனவேதத்திற்கொருபெயராயிற்று. இன் ஏழனுருபு. உம்மை சிறப்போடெச்சம். மேம்பாடெய்தினோர் சீவன் முத்தர். மனத்தின்காட்சி என்றது யோகநிலைமைக்கணிகழுமகக்காட்சியை. மறைந்த பொருளாயினும் காண்டற்குரியனென்பது விளக்க, மனத்தின் காட்சித்துறைதொறும் விளங்கி என்றார்; புறக்கட்காட்சியா னுணரு முணர்ச்சி விலங்குணர்ச்சிபோலும் அன்றி அதுபொருட் பேறாகாது. ஆதலால் அகக்கட்காட்சியே சிறந்ததென்பது விளக்கியவாறுமாம். விளங்கி என்பது "பிறைசூடி" என்றாற் போலப் பெயரென்க. இங்ஙனம் விளங்குபவன்

ஆதியந்தமில்லாதவனும் சம்பூரணனும் யாவர்க்கு மேலோனுமாயிருப்பவனென அவனிலக்கணங்கூறுவார் என்றுந்தோற்றமு மீறுமில்லான் குறையிலா னுயர்ந்தோன் என்றார். இவ்வாறு கருதிப்போற்றுவார் எவரினு மிகவுயர்ந்தோர் என்பார் நல்லுலகம் என்றார். என்று கொண்டு என்பதில் கொண்டு என்பது துணைவினையாய் நின்றது. போற்றும் என்பது படுவிகுதி தொக்கு நின்ற செயப்பாட்டுவினை. இறை—எப்பொருளினுந் தங்குகின்றவன். உட்பகைகளின் றடையின்றி அவனை யிறைஞ்சுவதும் அவனருட்காப்பின்றி யமையாதென்பது விளக்குவார் அருளரணம்புக்கு என்றார். "அவனருளாலே யவன்றாள்வணங்கி" என்றார் பிறரும். அரணம்—காவல்; ஐங்குறுநூற்றுரைபிற்காண்க. என்றும் அவனே புகலென இறைஞ்சுகின்ற தங்கொள்கையை மீண்டெடுத்துக் கூறியவதனால் இந்நூலினிது முடியுமாறு வணக்கஞ்செய்தார் என்பது பெறப்பட்டது. யாம் என்பது தோன்றா வெழுவாய். இது பாடாண்டிணைப்பாற்பட்ட கந்தழிவாழ்த்து என்னுந்துறை; கந்தழி—ஒரு பற்றுக்கோடின்றி அருவாகித் தானேநிற்குந் தத்துவங்கடந்த பொருள். இதனைத்தொல்காப்பியம் பொருளதிகாரம் புறத்திணையியல், ௩௩—ஆஞ்சூத்திரவுரையிலறிக. அணி தன்மையணி யென்க. ஒருவாறு சுருக்கியுரைத்தமையா லிதனகல முணர்ந்துகொள்க.

வேறு.

அவையடக்கம்.

துங்க நாவலர் துன்னும வைக்கணே
பங்க மாமொழி பன்னினு நல்லவாத்
தங்கு மென்பது தன்னை விளக்கவே
சங்க மான்மியஞ் சாற்றுவ னியானரோ. (உ)

வேறு.

நிறை புனற் புணரி யங்கண நீர்தன் னேருறச் சேரினேற் றுத்தன், னிறைமைதங் களிக்கு மியல்பெனப் புலமை யிருந்தமிழ்க் கடலெனுஞ் சங்கத், துறைபெரும் புலவ ரெனதுபுன் கவியு முவப்பினேற் றுயர்த்துவ ரெனவே, யறைதரப் புகுந்தே னதலி னிதையேற் றருள்விரென் றிசைத்தில னவர்க்கே. (௩)

## நூல்.

### நாட்டுச்சிறப்பு.

திருமங்கை மன்னுவது சிறந்தவட்கு மருகியென
வருமங்கை மின்னுவது மனமகிழின் பிணையுதவுந்
தருமங்கை துன்னுவது தன்னகமென் றேவயமாம்
பெருமங்கை யுன்னுவது பிரியர்பாண் டியனாடு. (௧)

பொன்னாடும் பிறநாடும் போற்றவளர் தமிழ்க்கிடமா
முந்நாடு மென்றறிஞர் மொழிதுவர்முன் மூன்றாகி
யிந்நாளி னன்காகி யிபற்சங்க முறும்பாண்டி
நன்னாடு தனக்கிணையோ நவிலுறுமவ் விருநாடு. (௨)

சுடும்பரிதி கனலிவழித் தோன்றியவ ராட்சியினுட்
படுந்தகைய விருநாடோ பயிருயிர்கள் பயனுதவ
விடுங்கதிரா மமுதுகுக்கும் விதுக்குலத்தோ ரரசுபுரி
நெடுந்தமிழ்ப்பாண் டியனாட்டை நிகர்க்குமெனுந் தகையனவே. (௩)

இருநாடு மிணையிலவே விதற்கிணையென் றெடுத்திசைக்கு
மொருநாடு முளதுகொலோ வுரைப்பரிய வளஞ்சிறந்த
பெருநாடு நலம்பலவும் பெறுநாடு பிரியர்ந்த
திருநாடு பொருணிறைந்த செழியபிரான் றிருநாடு. (௪)

வேறு.

மழை.

போகி யானைபோற் புணரியிற் புகுந்தமால் புனல்கொண்
டேகு மேல்வையி னருமதன் யானைபோன் றெழுந்து
நாக மேவிய பொதியமேற் புகுந்துபெய் நறுநீர்
வேக மோடுபன் னதிகளிற் பெருக்கொடு மிளிரும். (௫)

---

க. வயம்-வெற்றி
ரு. போகி-இந்திரன் மால்-மேகம்.
ஷ. மதன்யானை-இருள்.

### வேறு.

### குறிஞ்சி.

உந்துநதி நீர்பெருகி யோடுமிட மொன்றோ
சந்தன நிறைந்துளது தண்சுனையு மெய்துஞ்
சிந்தையசை யாதுதவஞ் செய்பவர்க டாமோ
பந்தமுலை மாண்புறுவர் பாவையரு மாதோ. (௬)

### வேறு.

போதகம்பெறு பொற்பினை முழைகளோ பொருந்துஞ்
சாது நற்றவ ருள்ளமுந் தருக்களுந் தாங்கு
மோது மத்தவர் கண்களோ வின்கணீ ருகுக்கு
மீது போதரு தருக்களின் குலங்களும் விடுக்கும். (௭)
கலங்கு நீரன வருவியோ கரியமா மேனி
யிலங்கு வேடர்க ளிடுவலைப் படுவன வெல்லாந்
துலங்கு மாம்பலை வாட்டுவ திரவியோ தோன்றிப்
புலங்கொள் சிங்கமாப் பறழ்களு மத்தொழில் பரிக்கும். (௮)

### வேறு.

தமக்கினியர் கிளைத்தனைய ராயினுமன் பிணைப்பூண்டு சார்ந்து
வேற்றோர், கமைப்பெருமன் னவர்குழுவென் னினுஞ்சாரார் போற்
சந்தக் காடு மேன்மே, லிமைக்குமொளி மணித்தொகையு மெடுத்தெ
றிந்து கனலூட்டி யெயினர் தங்கட், கமைக்குமுணை வெனப்பெரிது
மகிழ்ந்துவித்தி விளைப்பர்தினை யடுக்க லெங்கும். (௯)

### வேறு.

தடவ ரைக்குலச் சாரலு மேனைய தலமுங்
கடுக நற்பல வளமுளை கிளர்தரு காட்சி
யிடம் னைத்துமா மழையினுன் மிகக்குளிர்ந் திருக்கும்
புடவி மெய்ப்பட வருபுள காங்கிதம் பொருவும். (௰)
கோடி மாநிதி கொடுத்திடும் பன்மணி குணிலா
வீடு மாதிரம் வீசினர் குறத்தியர் நின்று
தேடி யோம்பினர் தினையினை மணிவிலை தெரியா
மூட மாதரைப் பேதைய ரென்பது முறையே. (௰௧)

---

௰௧. குணில்-கவண்.

போற்று வாணர்கள் புகல்பல கவிகளிற் புனைந்து
சாற்று கோமின்னார் தோட்கிணை சொலப்பெறுந் தகையாற்
றேற்று செந்தினை கவர்புளோப் பிவர்கரத் துயரை
மாற்று வாமென வரைகளுந் தெரிப்பபன் மணிகள். (௰உ)

வேறு.

வண்டருந்த வளமருப் பங்கயம்
வண்ட ருந்த வளமருப் பங்கயம்
மண்ட லந்தை வருங்கர முற்றவாய்
மண்ட லந்தை வருங்கர முற்றவாய்.

(இக்கவியின்கொண்டு கூட்டு) வண்டருந் தவளமருப்பங்கயம் கரமுற்ற வாய்மண்டலந்தைவரும் கரமுற்றவாய் வண்டருந் தவளமருப் பங்கயம் மண்டலந்தைவரும் என்பது.

(பதவுரை) வண்டருந் தவளமருப் பங்கயம்—வளத்தைத்தருகின்ற வெள்ளிய கொம்புகளையுடைய அழகிய யானைகள், கரமுற்ற வாய்மண்டலம்—ஒளி நிறையவாய்ந்த சூரியமண்டலத்தை, தைவருங் கரமுற்றவாய்—தடவுகின்ற துதிக்கையையுடையனவாகி, வண்டருந்து—வண்டுகள் (தேனை) யுண்கின்ற, அ வளமருப்பங்கயம் மண்டலந்தைவரும்—அந்தக்கிண்ணம்போன்ற வாசனையையுடைய தாமரை மலர்கள்நெருங்கிய தடாகங்களில் வாராநிற்கும். எ-று. கரமுற்றவாய் மண்டலமெனவே சூரியமண்டலமென்பது பெற்றும். கயம்—பால் பகாவஃறிணைப்பெயர். அவ்வள்ளம் அவளம் எனநின்றது. தாமரைக்குக் கிண்ணத்தை யுவமானங்கூறுதலை "வள்ளவாய்ச் செழுங்கமலம்" என நைடதத்திலுங்காண்க. குறிஞ்சியிலுள்ளயானைகள் மருதநில வாவிகளில்வந்து விளையாடுமென்பது கருத்தாகக்கொள்க. (௰௩)

வேறு.

இத்தகு குறிஞ்சியி னெழிலை முற்றவும்
பத்தியி னுரைத்திடற் பாலர் யாவரே
வித்தனு மமுதுணு நேரு மண்டர்வா
ழத்தகு முல்லைமுன் னுகும் பாலையே. (௰௪)

---

௰உ. கோ-மலை. ஒப்புதல்-ஒட்டுதல். வரை-மூங்கில்.
௰௪. அண்டர்-இடையர்.

### வேறு.

### பாலை.

பாலை வென்றதென் றுரைபத மடந்தையர் பண்பு
சாலு மன்பரோ டகன்றுழி யாதவஞ் சாடப்
பாலை வென்றதென் றுரைபத முடையராய்ப் பரிவு
மேலு றும்படி வெங்கதிர்க் குறையுளாய் விளங்கும். (௰௫)

கொடுப்பர் போற்றிகழ்ந் திறுதியி லிலையெனுங் கொடியோர்க்
கடுப்ப நீரெனக் கானலைக் காட்டியங் காப்போ
டடுப்ப நீக்கிடும் பாலையைச் சொலி நினைத் தகம்வாய்
வடுப்ப டக்கொதிப் படைகிலே முல்லையை வதுப்பாம். (௰௬)

### முல்லை.

ஒருகு டத்துறும் பாலவண் டொறுவர் கை யுற்று
மருவு பற்பல குடங்கொளப் பெருக்கொடு மன்னுந்
திருநி கர்த்தவாய்ச் சியருரைப் பகையெனச் செயிரா
வெரியில் வைத்தட நேயமே மேற்பட விலங்கும். (௰௭)

மாண வச்சிறுர் விடைச்சொலித் தேறிடார் மறித்து
நாணு ருதிறை சொல்வர்போற் றெருறுவியர் நகைநே
ரேணு ருமையிற் பலதர மெல்லரும் பெடுத்துக்
காண மாலதி கந்தரு மாலதி கவினும். (௰௮)

பாடி யெங்கணுங் கதித்திடு பம்பையி னொலியு
பீடில் வேய்ங்குழ லெழுப்புசா தாரியின் னிசையும்
வீடு றச்செய்ய வீடுக டொறுந்தொறு வியர்க
ணாடி வெண்டயிர் கடையொலி யோங்குமெந் நாளும். (௰௯)

### வேறு.

நிரையினங்கள் வாய்க்கொள்ளச் சிறுபுல்லைத் தருமுல்லை நிலந் தான்மேவச், சுரையினின்றுங் களகளெனச் சுவையமுதந் தரல்சிறி

---

௰௫. பதம்-முன்னதுசொல், பின்னதுபாதம்.

௰௭-குடம்-முன்னது பசு. தொறுவர்-இடையர்.

௰௮-இறை-விடை. மாலதி-முல்லை.

௰௯-சாதாரி-முல்லைப்பண்.

து தூயோர்க் கீயிற், பெரிதுபயன் றருவரெனு மியல்விளக்கு மக்கொல்லைப் பெருமை சொல்லற், கரியதுபூங் கழனிதிகழ் மருதநிலத் தன்மையுஞ்சற் றறைது மன்றே. (உ௰)

வேறு.

மருதம்.

தாங்கள்விளைத் திடுஞ்சாலி தழையவே தழையிடுவார்
வீங்கிவளர் நாற்றெடுக்க வேண்டிவிதை விதைப்பர்சிலர்
பாங்குறுபல் வயல்களிலும் பண்புபெறத் தோன்றிநின்றே
யோங்கிவிளைந் திடமனத்தி னுன்னிவிதை விதைப்பர்சிலர். (உக)

வேறிடத்துப் புகுதாமல் விதைக்கவளர் கூழனைத்துங்
கூறுபதி யுடன்றனதிற் குலவுமட வார்புரையுஞ்
சேறறிந்து நடுதலினாற் செழித்துவளர் பயிரனைத்தும்
வீறுபெற மணமகனின் மேவுமட வார்புரையும். (உஉ)

வேறு.

அரும்பு மென்முலை யார்முகக் கிணைமல ரதனை
யொருங்கு கட்டிட முட்பொர வருந்துவ ருவரித்
தரங்க நீர்வளை தரணியிற் பிறந்துமுட் டாளைக்
கரம்பி டித்திடு கன்னிய ரெவருளங் கவலார். (உங)

வதன மாமதி காண்டலுங் குவிமரை மலர்க
ளிதமு லாவிவ ரெழிற்குநா ணிலக்குமி யில்லின்
கதவ டைப்பதுங் களைவரென் றம்மல ரஞ்சி
யிதமெ னுங்கரங் குவிப்பதும் போன்மென விலங்கும். (உச)

வேறு

வயலெலாம் வளத்தா னீடி மள்ளர்கண் களிப்ப வெய்தும்
பயிரின நமக்கு நன்னீர் பாய்தரக் கொடுத்துக் காத்த
புயலினங் களுக்கு நம்பாற் பொருந்திய பயனீ வாமென்
றியைபுறச் செல்வ போற்சென் றெய்தின வான மீது. (உரு)

---

உ௰-நிரை-பசுக்கூட்டம். சுரை-பசுமுலை
உஉ-கூழ்-பயிர். பதி-நாயகன்.
உங-கட்டல்-களைதல்.

இலங்கிவின் சென்ற பைங்கூ ழிருங்குலை சாய்த்த தோற்ற
நலம்பெற நமக்கு நன்னீர் நல்கியிவ் வுலகம் போற்றும்
பலம்பெறு புயல்கைம் மாறு பற்றுறா மையின்வ சிக்கத்
தலந்தரு நிலத்துக் கீவான் சார்வது மானு மன்னே. (௨௬)

வேறு.

அரிவாளைக் கரமேந்தி யரிவாரு மரிவாரி
வரிவாருந் தலைச்சுமந்து வருவாருங் களத்தினிடைச்
சொரிவாரு மினும்பல்வினை சூழ்வாரும் பெருநெடும்போர்
புரிவாரு மெனநிறைவார் புரிவாருங் களமரெலாம். (௨௭)

பழுதிலா மணிச்சாலி பகுத்தெடுத்துத் தமக்காக்கி
வழுதெலா மேதிகட்கே வாரிவரை யெனக்குவிப்பா
ருழுபொழுதும் போரடிக்க வுறும்பொழுதுந் தம்மின்மிகு
தொழில்செயலா லவையதிகந் துய்த்திடுந றகுமெனவே. (௨அ)

வேந்தரிறைப் பெரும்பொருட்கு மேவுபல வேதியர்க்குஞ்
சோர்ந்துவரு மாதுலர்க்குந் தொன்மைமுறைப் படிமகிழ்வா
லீந்துவிடுத் தெஞ்சியவை யெலாம்பண்டி மிசையேற்றிச்
சேர்ந்ததம திருக்கையுய்த்துச் சிந்தைமிக மகிழ்வாரால். (௨௯)

வேறு.

பெருமா வுருவு மாவினிறம் பிறங்கு தளிரு மேய்ந்துபொன்னின்
வருமா நிறமு மடிப்பவர்க்கும் வாய்நீ ரூறு மாமணமும்
பொருவி லாத மாசுவையும் பொருந்து பழமுஞ் சிறந்துறலா
லரிய நூலோர் மாமரமென் றறைபுந் தருவும் பலவாங்கண். (௩௰)

வேறு.

அரம்பை யென்னலால் விண்ணிடைச் செல்வன வாகும்
வரம்பில் வாழைக டம்முடை மாதரார் குறங்கின்
றரம்பெ றுமையாற் குலைபடக் கண்டனர் சாடிக்
கரங்கொ டேகுவார் காரெனக் குலவிய களமர். (௩௧)

---

௨௬ - நல்கிஎன்பது- ஈண்டுஎச்சமன்று நல்கியாகியபுயல் எனக்கூட்டுக.
௨௭ - அரி-நெற்கதிர். புரிதல்-முன்னதுசெய்தல். பின்னது-விருப்பம்.
௨அ - சாலி-நெல். வழுது-வைக்கோல்.
௩௧. குறங்கு-தொடை.

அலகில் வானக மீதிற்போ யருஞ் சுதை புசித்தே
யிலகு நாகருக் கிதலிற் பயனிலை சேடன்
றலமு லாவுநா கருக்களிப் பாமெனக் கரல்போ
னலமுறப்பலா சினியடிக் கீழ்க்கனி நண்ணும். (௩௨)

புடவி தாங்குவான் சேடனே நாந்தொழில் புரியா
விடினி யார்வளர் வாரவன் மேற்சென்று வெற்றி
யடைது மென்பர்போன் மள்ளரப் பலவடி யகழ்வா
ரிடும வன்றிறைப் பொன்னென வதன்சுளை யெடுப்பார். (௩௩)

வேறு.

பிறந்தபொழுதின்றியிடை யினிற்றோன்றி முதிர்ந்துவிழும் பெற்றியாற்றஞ், சிறந்தமின்னார் தனநேராத் தெங்கினங்காய் சாந்தமணி சேராதென்று, முறைந்திடுதல் கடினமன்றி மென்மையுறு தெனத்தண்ட முஞற்றுவார்போற், றிறங்கொடவை பறித்துரித்துச்கொடுசெவ்வா ரிரும்பனைய திரடோண் மள்ளர். (௩௪)

வேறு.

நெய்தல்.

பரத்தியர் விழிப்பகை படைத்தகயல் கொள்ளுங்
கருத்துடைய கொண்கர்வலை கைக்கொடு கடற்கண்
விரித்தனவ் பிடித்தவர் விழிக்கெதிர் குவிப்பர்
தரைத்தலை மனைப்பகை தடிந்தில ரியாரே. (௩௫)

தழீஇயவர் தணப்பவரு தன்மைசகி யாதே
யழிவுறுமி னார்கடலி னரவமெழ வெம்பிக்
கழியென வுரைத்திடுதல் கண்டுகொனம் முன்னோர்
மொழிபல்பெய ரோடுகழி யெனவுமுன் முடித்தார். (௩௬)

களப்பகை விழிப்பகை கயற்பணில மென்னு
நுளைச்சிய ருணக்கியரி நோதல்புரி காலை
விளக்குறு மணித்திரள் வெளிப்பட வெடுத்தே
யளப்பர்ததி னென்மது வடுத்துதவு வோர்க்கே. (௩௭)

---

௩௨. சுதை-அமுது. ஆசினி-ஈரப்பலா.
௩௩. திறை-கப்பம்.
௩௬. வெம்பி-கோபித்து.
௩௭. அரி-அரிந்து; வரிப்புனைபந்து என்பதுபோலநின்றது.

இந்தகைய வைந்துதிணை யின்னலமு மொன்றி
மெத்துவள மத்தனையு மேவுதிரு நாடு
வைத்துறு சிறப்புரை வரைத்திலை யிதிற்சீர்
மொய்த்த மதுரைப்பதி முதற்றகைமை சொல்வாம்.(௩௮)

நாட்டுச்சிறப்பு முற்றிற்று.

ஆகச்செய்யுள்-௪௧.

---

## நகரச்சிறப்பு.

புலமெ லாம்வினை போகமு நன்னெறி பொருந்துங்
குலமெ லாம்பயி லொழுக்கமுங் கல்வியுங் குணனு
மிலமெ லாஞ்செறி மக்களுஞ் செல்வமு மேனை
நலமெ லாங்குழீஇ வாழ்வது மதுரைமா நகரம். (௧)
சங்க முற்றது தவமெலாம் பெற்றதெட் டுணையும்
பங்க மற்றது பவமெலாஞ் செற்றது பகைவர்
புங்க மிற்றது புலவர்கள் சொற்றதெப் போழ்து
நங்கள் சொற்றுதி பெற்றது மதுரைமா நகரம். (௨)
எண்ணும் போதுளத் துயரொழிப் பதுமகிழ்ந் தெழுந்து
நண்ணும் போதுமா மிடியையுந் தொலைப்பது நாளுங்
கண்ணு நெஞ்சமுங் களித்திடச் செய்வது கனிந்த
பண்ணும் பாடலும் பயில்வது கூடலம் பதியே. (௩)
சில நதிக்கொரு பதியெனுஞ் சிந்துவைச் சேரா
திலகு தண்டமிழ்க் கடற்பதி மணமிசைந் தின்பங்
குலவு வையையந் தென்கரை யகத்தது கோதில்
பலரும் வந்துறை தருதிரு வாலவாய்ப் பதியே. (௪)

புடைநகர்.

வேறு.

ஆங்குமடவார் பதத்தினிக ரர்கநீரிற் றவஞ்செயல்போன்
றோங்குதடத்திற் செங்கமல மொளிருமதன்மே லன்னமுறல்
வீங்குமுலையம் மாதர்பத மேவுநடையைத் தான்பொருந்திப்
பாங்குபெறவே தவங்கனலிற் பயிலுஞ்செய்கை போன்றுளதே.(௫)

---

௪-சில-ஈண்டுப்பல என்க; "என்னேய் சில மடவார்" என்பதற்குத் தண்டியலங்கார வுரையிற் கூறினமை காண்க.

வேறு.

ஆங்கு மண்ணிக ராம்பொன்னாட் டிரணிய மளித்தல்
பாங்கு ருதெனக் கற்பகம் பயிலுமர் நாட்டை
நீங்கி யிண்டுவந் துறைதல்போற் பொன்னிற நிலவி
யோங்கு நற்கனி தரும்பல தருக்களு முளவால். (௬)

பொரு விலாதுயர் பொன்னுரு விரதங்கள் போந்த
தெருவெ லாங்கற்க ளுரைத்தபொன் கீற்றொடு செறிதன்
மருவு கம்மியர் மாடைபி னுயர்தர மாற்றுத்
தெரியும் வண்ணஞ்செய் பொன்னுரை கல்லெனத்திகழும். (௭)

நீரி டைப்புகுந் தாம்பலாம் பெயருற நிலவு
மாரும் பன்மலர் துவைத்துப்போ தும்பியா வமருஞ்
சேரும் வன்மையான் மாதிர மெனப்பெயர் சேருஞ்
சாரு மேழுயர் கறைபடிக் குஞ்சர சங்கம். (௮)

ஒற்றை யாழிசே ரொருவையத் தொருவனுற் றிடவே
சற்றும் வெள்குறு தெழுவரிப் பீரெனத் தரணி
பெற்ற வேழ்பரிமேலுறுத் தெழுந்தெனப் பெயர்ந்து
கொற்ற நற்றலை தூக்கின வருவபல் கோரம். (௯)

தங்கள் கையிலோர் விரரோர் தனுவொடுஞ் சார்ந்தாற்
பொங்கு பற்றலர் பற்பலர் தனுப்புகி புராளு
மங்கு வந்தொனூர் மலையினவ் விரர்தம் மணிகைத்
தங்கு கேடக மன்றியோர் கேடகஞ் சாரார். (௰)

## இடைநகர்.

வேறு.

அணிதான்றிப் மலர்பம்பிய வளிபொங்கிய பொழிலும்
பணிதங்கிய வுலகின்றலை பயிறெண்கய வனமும்
பணிலம்பயில் புளினங்களு முயரும்பர்கள் பரவு
மணிகொண்டிழை தருமம்பொனின் வனைமன்றமு மருவும். (௰௧)

---

௬-இரணியம் - பொன்
௭-மாடை - பொன்.
௯, வையம்-தேர். தரணி-சூரியன்.
௰- தனு-முன்னதுவில். பின்னது-உடல். கேடகம்-முன்னது பரிசை.
பின்னது-கேடு அகம் எனப்பிரிக்க.

உருவந்தனில் ரதியுட்பணி யுயர்மங்கையர் குழையுந்
தாளந்தனை யிகல்கொண்டொளி தருதந்தமு நிலவத்
திருமங்கையின் மலருங்குவ ளையும்விண்டிடு செயலி
ன்ரவென்பது பகலென்பது துணிவின்றென விலகும். (௰உ)

குரவங்கமழ் குழன்மங்கையர் குளிரும்புனன் முழுகும்
விரைதங்கிய தடமெங்கணு மிளிர்முண்டக மலர்க
ளிருபந்தன முலையன்னவ ரெழில்கண்டிட வெழுநீ
ரரமங்கைய ரவர்தம்முக மாமென்றிட வலரும். (௰௩)

அயிலுடிய விழியார்மிசை யணிமாமணி யொளியை
வெயிலாமெனு மகிழ்வோவவர் மிளிர்வாயுரை நிகர்சீர்
பயில்வாமெனு நினைவோவுரு விலியார்படை யெனவோ
குயிலுடின பலகூவுவ குலவெத்திசை களுமே. (௰௪)

பஞ்சாலதி துயர்கூர்பத பதுமத்தவர் குழலை
மஞ்சாமெனு நினைவோவியன் மருவக்கரு தினவோ
விஞ்சாதர மொடுகொண்பவர் மேன்மேன்மகி ழுறவே
யஞ்சாயல்கொண் மடமஞ்ஞைக ளாலும்பல காலும். (௰௫)

வேறு.

தொடுத்த பூவணி பூவையர் கரதுநேர் சொலலாற்
கடுத்தன் மேவியே யலைப்பர்போன் மணிபல கதுவி
யெடுத்த பேரொளி யூசலை யாட்டுவா ரிங்ங
னடுத்து நோக்குவார் மனமெல்லா மன்னவா றுடும். (௰௬)

மாதர் வீசுபொற் சுண்ணத்தின் றுகள்செறி மாண்பா
லோது பொன்னுல கென்னலாம் படியொளி யோங்கு
மீது காண்குநர் விழிகளு மிமைப்பில வினியிப்
பூதலத்திடை நகரிதற் கெதையிணை புகல்வாம். (௰௭)

வேறு.

## அகழி.

வருணன் வலியைத் தொலைத்துநமை வறக்கப் புரிந்த வேன்மாற
னுரிய பதிசூழ் கிடந்துதவ முயற்றிப் பிழையை யொழித்துமெனக்

கருதிக் கடலே புறங்கிடந்த காட்சித் தலது பேரகழி
பொருவப் புகலும் பொருளறியேம் புகல்வா ருளரேற் புகலுகவே.

## மதில்.

நமது வழித்தோன் றலர்செங்கோ னடாத்து மதுரைக் கரணுகி
யமைதி யெனத்தன் னூர்கோளை யவிர்மா மதியே விடுத்தாங்குச்
சமையுந் தலமு மம்மதிமண் டலமுந் தொடரத் தவளமணி
யமைகொண் டிலகு மரண்வேறிங் கறைதற் குவமை யிலதம்மா. (௰௯)

## பரத்தையர் வீதி.

வேறு.

மெய்யுறு மின்பக் கிழத்தியர்ப் பிரிந்து வேசையர் பொய்யுறு முய க்க, மையன்மீர் வேட்டு வருந்தன்மி னென்றே யடுப்பவர்க் கறைந்தி டவரல்போற், பொய்யுரு வான சித்திர நிரைகள் பூண்மலர்த் தாரி டையளிக, ளொய்யெனப் புகுந்து வருந்தின மீளு மொளிதிகழ் கணி கையர் மறுகு. (௨௰)

## ஆவண வீதி

வேறு

பாட்டளி மூசிய பனிம லர்த்தொடை
பூட்டியும் பன்மணி பொலியுந் தொங்கல்கண்
மாட்டியுஞ் சந்தனம் வாச நீரொடு
கூட்டியுந் தெளித்திடக் குலவு மாவணம். (௨௧)

ஒண்ணவ மணிவிருப் புற்று வந்தவ
ரண்ணியே புதுமையா வவைக ணோக்குறீஇ
நண்ணுமம் முன்மொழி நாமமியாண்டும்போ
லெண்ணல பண்பென வியையு மெங்கணும். (௨௨)

பொருப்பிடை யெய்திய பொருளுங் கானிடை
வரைப்பிலாப் பொருளுநன் மருதச் செல்வமுந்
திரைக்கடற் செல்வமுஞ் சேர்ந்தொன் றாகியே
நிரைப்பட நிரைந்தன நியம மெங்குமே. (௨௩)

---

௰௮ - இக்கவியின் கதையைத் திருவிளையாடற் புராணம் கடல்சுவற வேல் விட்ட படலத்திற் காண்க.
௰௯ - ஊர்கோள் - பரிவேடம்.

## அந்தணர் வீதி.

### வேறு.

புண்ணிய மறையோ ரோதும் பொருளமை பொறியாக் கேள்வி
யெண்ணியங் கறிந்த கிள்ளை யினஞ்சந்தை கூட்டி மேலை
நண்ணியங் குரைப்ப வானோர் நவில்சுக மொழியி னாலே
பண்ணியல் சுகமெ னப்பேர் பகர்ந்தன ரதற்குப் போலும். ( )

## அரசர் வீதி.

### வேறு.

தினமுமதி மந்திரிகள் சித்தத்தின் வழியொழுகிப்
பனகமுடிச் சுமைபொறுத்துப் பயமைந்து மறத்துடைத்துத்
தனபதிபோற் பொருண்மருவித் தரணியெலாம் புகழ்பரப்பிக்
கனவிடத்தும் புவிபுரந்து களிப்பர்கௌ ரியவேந்தர். (௨௫)

## வைசியர் வீதி.

தினம்வளர் முற்பக்கஞ் சேர்ந்துறுக லாநிதிதன்
மனமிகவு நாணமுற மன்னுதங்க லாநிதியை
நினைவினொடு கணந்தோறும் வளர்வித்து நிசவுரையே
கனவினிலும் புகன்றுகுறை காணாதார் புகழ்வசியர். (௨௬)

பல்கலையுந் தெளிந்தந்தப் படியொழுகிப் பிறரையுமே
நல்வழியி னனியியக்கி நரர்தேவர் முதலெவரு
மொல்லும்வளம் பெறப்பாரி னுழுவித்துப்பயிர்விளைத்துச்
செல்வமெலா முற்றிருப்பர் திருமேழிச் சிறப்பாளர். (௨௭)

## சூத்திரர் வீதி.

மெய்த்தபுகழ் மூவருக்கும் வேண்டுபணி பலபுரிந்து
பொய்த்தமொழி புகலாரா யெய்த்தவர்க்குப் புகலாராய்ச்
செய்த்தலையில் வேற்றழித்தாஞ் செய்யும்வினை முழுதாற்றித்
துய்த்துநலம் பலபூண்டு சுகத்துறைவர் சூத்திரரே. (௨௮)

---

௨௫ - பயமைந்தாவன - தன்னாற்றன் பரிசனத்தாற் பகைத்திறத்தாற் கள்வராலுயிர்தம்மாலானபயமைந்தென்க. பெரியபுராணந் திருவாரூர்ச்சிறப்பு - ௩௫ - ஆங்கவியிற் காண்க.

௨௮-புகலாராய் எனப்பிற் கூறியதற்கு புகலிடமாயுள்ளாராய்என்க.

## கற்புடைமகளிரியல்பு.

### வேறு.

முன்னெழுந்து பணிந்துசுத்தி புரிந்தட்டு விருந்தினர்க்கு முகமன்கூறிப், பின்னருந்தி நாற்குணமும் பெற்றுமகப் பெற்றுமணம் பெற்றோ ருள்ள, மென்னுமிலஞ் சியின்மலர்ந்த மலராகிப் பின்னுறங்கி யிசைக்கோர் விடாய் மன்னுறுவ ரிக்கர வாழ்வுடைய கற்புடையமகளிர் மாதோ. (உகூ)

## அன்னசாலை முதலியன.

### வேறு.

புக்க வாதுலர் கட்கும் புகழுறத்
தக்க வாறு சமயத் தருக்குமே
மிக்க வுண்டி விளைதருஞ் சாலையுந்
தொக்க பல்வகைச் சாலையுஞ் சுற்றெலாம். (௩0)

தேவ போசமுஞ் சிந்தை வெறுத்திடப்
பாவ லோர்களிற் பற்பலர் கூடியே
மேவு நூல்கள் விளம்பி யளவளாந்
தாவில் சாலை தலைத்தலை தங்குவ. (௩க)

சரியை யாற்றுந் தகையின ரீட்டமுங்
கிரியை யாற்றிக் கெழுமின ரீட்டமு
மரிய யோகத் தமர்ந்தவ ரீட்டமு
முரிய நல் ட மொவ்வொரு சாலெலாம். (௩உ)

### வேறு.

இன்னநகர் மாடமிசை யேற்றுப்பொற் குடத்தினொளி
துன்னுதலாற் பொன்னிறமாத் தோற்றுசுர ருலகதனைப்
பொன்னுலக மெனவெவரும் புகலுவார் பொன்னுயிற்
பொன்னின்மிரைத் தருக்களொடு பொலிகொடிகள் வளர்வனவோ.

மதுரையென நினைத்தவுடன் மனங்குளிருஞ் சொலக்கேட்கி
னதுபொழுது செவிகுளிரு மம்மொழியோர் தரம்பகரிற்

---

உகூ—முகமன் - உபசாரம், நாற்குணம் - நாண மட மச்சம் பயிர்ப்பு.

கதுமெனவே வாய்குளிருங் காண்டலுறிற் கண்குளிரு
மிதிலுறைவார் பெறுமின்ப மினைத்தென்னுந் தகையதுவோ. (௩௪)

ஆகச்செய்யுள் எ௬.

---

## முதற்சங்கம்.

இந்நகரிற் றொன்றுதொடுத் தென்றுமர சுரிமைகொடு
மன்னுமதி மரபில்வரு மன்னர்பிரா னுழுவைமுனி
தன்னருகு பரவிவரத் தனிக்கயலை யுயர்த்திவயந்
துன்னவர சாட்சிபுரி துங்கமணி முடியுடையோன். (௧)

அலைமாதுங் கலைமாது மலையாமற் கலையாம
னிலையாக வுரந்தால நேர்ந்துறையப் புரிபெருமா
னுலையாத பெருவலியா னென்னலருக் குளநலியான்
சிலையாலன் றறத்தாலே செகங்காக்குஞ் சீருடையான். (௨)

சினமதனைச் சினந்துவரு சிறப்புடையா னென்பதையெத்
தினமுமறி வுறுத்துங்காய் சினவழுதி யெனும்வேந்தன்
மனுமுறையிற் கோல்செலுத்தி வருநாளின் வடதிசையின்
கனமகலத் தக்கணஞ்சேர் கதிப்பவரு மொருமுனிவன். (௩)

விந்தமடக் கியகரத்தான் வியன்றமிழுக் காகரத்தான்
சந்தமலைச் சினகரத்தான் றண்கருணைச் சாகரத்தான்
பந்தமறு மாதவத்தான் பன்னிருமா ணவருடையா
னந்தமிலா வாழ்வுடையா னகத்தியமா முனியென்பான். (௪)

பொன்மயமாஞ் சடைமுடித்துப் புண்ணியம்போந் ததுபோன்று
தென்மதுரை நகர்மேவிச் செழியர்பிரா னவையெய்த
மன்மகிழ்ந்து பணிந்துமுக மன்மொழிந்து போற்றவவண்
டன்மனமுங் குதுகுலிப்பத் தங்குழியவ் விருவோரும். (௫)

---

௧-உழுவை, முனி-என்பன புலிக்கொடி, விற்கொடி என்க.
௪-ஆகரம் - உறைவிடம்.

தந்நாடு தழைப்பதற்குத் தம்மொழியை வளர்ப்பதுவே
முன்னாகும் வினையென்ன மூதறிவி னனிசூழ்வார்
பின்னாருங் கலைமடந்தை மேவுதிரு வடிவாகி
நன்னாக ரீகமுறு நாம்வழங்கித் தமிழ்மொழியே. (௬)

கன்னடமா தியபலமக் களைப்பயந்துங் களைப்பின்றிக்
கன்னிநிலை குலையாது காலகதி யாற்சிறிதும்
பின்னமுறா தென்றும்வளர் பெருமதிபோற் பிறங்குவது
பன்னுமொழி யெவற்றுளுமேம் பாடுநனி பெறுவதென்றே. (௭)

நயமிகுமிம் மொழியுணரு நாவலரைச் சபைகூட்டி
யியலிசைநா டகமுறையி னிலக்கியமு மிலக்கணமும்
பயனுறுபன் னூல்வகையும் பரப்புதுமென் றொருப்பட்டார்
செயலரிதென் னிருபொருளுஞ் சிறப்பவுறு மவர்தமக்கே. (௮)

பருந்துகழு கலகைகட்குப் பசியகலப் பகைவருடல்
விருந்துசெயும் வேல்வேந்தா மேதகுகாய் சினவழுதி
திருந்துதமிழ்ப் புலவர்பலர் செறியவகத் தியன்றலைமை
பொருந்தியுறப் புரிந்துநனி பொருளளித்துப் புரந்தனனால். (௯)

அன்னதுவே தலைச்சங்க மாகிநிகழ் வுறுங்காலை
முன்னுமகத் தியமெனும்பேர் மொழியுமுத லிலக்கணநூ
றன்னையுமம் முனிதானே தந்துதமிழ் மூன்றனையும்
பன்னுறுநன் முறைப்படுத்திப் பண்புபெற விளக்கினனால். (௰)

அகத்தியனாற் செயப்பெறலா லந்நூலுக் கபிதான
மகத்தியம தான்றுதமிழ்க் கத்தகுநூ லதுபொழுதி
லகத்தியமா தலினாலு மப்பெயர்த்தா மாராய்வா
ரகத்தியன்முன் மூன்றுமுறை யமையவிளங் கியதன்றே. (௰௧)

அன்னதனி யிலக்கணம்பே ரகத்தியஞ்சிற் றகத்தியமா
மன்னுமிரு வகையவற்றை மாமுனிதொல் காப்பியன்முற்
பன்னிருமா ணவர்க்குமுளப் பண்பினுரைத் தனனுணர்ந்த
பின்னவருந் தனித்தனிநூல் பிறப்பிக்கும் வலியடைந்தார். (௰௨)

---

௰௧. அபிதானம்-நாமம்.

பொடியாகப் புரம்படுத்தார் பொருப்பெறிந்தார் முரஞ்சியூர்
முடிநாக ராயர்நிதி யின்கிழவர் மொழிபுமுறைப்
படியேயைஞ் ஞூற்றுநாற் பத்தொன்பான் பேராளர்
நெடிதான செந்தமிழ்ச்சீர் நிலவவளர்த் தனரம்மா. (௰௩)

வேறு.

மேலா மிவரோ டென்னவரும் வியப்பப் போந்து பாடினவர்
நாலா யிரத்து நானூற்று நாற்பத் தொன்பான் புலவரவர்
நூலாம் பரிபா டலுநன்கு நுவலுமுதுநா ரையு மிவைகள்
போலாம் பலவா மவற்றையாம் புகல வரம்பிற் புகுதாவே. (௰௪)

வேறு.

இவ்வகையாக் குழீஇயதமிழ்ப் புலவருக்கு வேண்டுவன வெல்லாந்தந்து, செவ்விபெற விரீஇயவர்காய் சினவழுதி முதற்கடுங்கோன் றென்ன னீறு, வெவ்வமில்சீ ரெண்பத்தொன் பதுவேந்த ரன்னவரு ளெழுவ ரென்ப, தவ்வகன்ற தமிழ்பாடி யரங்கேற்றிப் புகழ்பூண்ட தக்கார் மன்னோ. (௰௫)

நாற்பஃது தலைப்பெயுநா லாயிரத்து நானூற்று நல்யாண் டெல்லை, நூற்பெருஞ்சீர்த் தலைச்சங்கம் விளங்குவதற் கிடன்கொடுத்து நோன்மை பூண்ட, சேற்பழனத் தென்மதுரை யைக்கடல்கொண் டதுபரமன் றிருவு ளத்தான், மேற்பரவிப் புணரிவரிற் றவர்வெகுளி போற்றடையின் மேவா தன்றே. (௰௬)

## இரண்டாஞ் சங்கம்

கருங்கடலின் னணம்புரியக் கருங்கடலைக் குடித்தவன்றொல் காப்பி யன்சீ, ரிருந்தையூர்க் கருங்கோழி மோசிவெள்ளூர்க் காப்பியனா மினைய ரோடு, திருந்துசிறு பாண்டரங்கன் றிரையன்மா றன்றுவரைச் செம்மற் கோன்யாப், பொருந்துகீ ரந்தைமுதற் புலவர்குழீஇக்கபாடபுரம் பொற்பச் சேர்ந்தார். (௰௭)

---

௰௫. தவ்வு-சிதைவு.

இந்தவித மொன்றிலறு பான்புலவர் பலதமிழ்நூ லிசைத்துக் கூடிச், சந்தமுற வளர்த்தனரன் னவராதி யேழுசதந் தலைபிற் கொண்டு, வந்தமூ வாயிரவர் கலிகுருகு முதற்பலநூல் வகுத்தா ரன்னோர் தந்தொகைவற் சரத்தெல்லை தமிழரசி செங்கோலுந் தழைத்த தன்றே. (௰அ)

இனையவகை யிடைச்சங்கத் தின்னவரை யிரீஇயினு ரேவ ரென்னின், முனைவெலும் வெண் டேர்ச்செழிய னுதிமுடத் திருமாறன் முடிய வொன்பான், புனைதருமெண் பதின்மரா மவரிலைவர் கவியரங்கிற் போற்றப் பூவில், வனைபுகழ்கொண் டனர்பண்டை வாரிதிபாண் டியனுட்டை வௌவிற் றன்றே. (௰௯)

# மூன்றாஞ் சங்கம்.

பின்றிவசஞ் சிலசெல்ல வடமதுரை யெனநாமம் பிறங்கிவ் வூரி
னன்றுபுரி சிறுமேதா வியனுர்சேந் தம்பூத னுர்பல் கேள்வி [லுந்
மன்றவுறு யறிவுடையா னுர்பெருங்குன் றூர்க்கிழார் மனத்தெந்நூ
துன்றுமிளந் திருமாறன் மதுரையா சிரியனல்லர் துவனு ரோடு. ()

புவிபுகழு மருதனிள நாகனு ரிறைகவியிற் புரையுண் டென்று, நவில்கணக்கா யனர்மகனுர் நக்கீர ரேயாதி நாற்பத் தொன்பான், கவிவலிமைப் புலவருள்ளார் கடைச்சங்கம் வடமதுரை ககனம் போற்றுஞ், செவிபடைத்தா யிரத்தெண்ணூற் றைம்பதாண் டளவுநன்கு திகழ்ந்த தன்றே. (உக)

இன்னமூன் றுஞ்சங்கத் தேமுழுநா வலருடன் றுமினிமை வாய்ப்பச், சொன்னநூ லாங்கேற்றி னவர்நானூற் றைம்பதிலோர் தொகையிலாதா, ரின்னவருண் மூவர்பாண் டியராவர் சிற்றிசைபே ரிசையே கூத்து, மன்னுவரி யிருதொகைநற் றிணைமுதலாப் பற்பலநூன் மல்கிற் றம்மா, (உஉ)

---

௰அ. வற்சரம்-ஆண்டு.

உ௰. திவசம்-நாள்.

உக. செவ்வி-செவியென வந்தது. கவி-கொங்குதேர் என்னு முதற் குறிப்புடைய கவி.

வேறு.

இக்க விப்பெரும் புலவரை யிரீஇயினா ரிசையே
மொய்க்க வுற்றிமி முடத்திரு மாறனே முதலா
வுக்கி ரப்பெரு வழுதியீ றாகவே யொன்பான்
மிக்க நாற்பது வழுதிய ரென்பர்நூல் விரிப்போர். (உ௩)

இனைய தன்மையின் வழுதியர் மரபுளோ ரெவரும்
புனையு மாமுடி யினுமிகத் தமிழ்நசை பொருந்தி
வனைய மேம்படு நிலையுடன் முத்தமிழ் வாரி
கனைக டற்பரப் பினுமிகப் பரந்ததெங் கணுமே. (உ௪)

நன்று சேருமிம் மதுரையைக் கூறுநர் நலங்கள்
குன்றாத் தமிழ்க் கூடனற் றமிழ்கெழு கூட
லென்று பற்பல நூல்களி லிசைத்தன வொன்றான்
மன்ற வென்னொரு நாப்புகல் சீரதோ மதுரை. (உ௫)

கைத வந்தெறு கைதவ னொருமனுட் கறுத்துச்
செய்த சூளிலியா [uncertain reading] னிதுசெயே னென்னிலென் றேத்தை
யைது நாவலர் பாடலர் வரைகவென் பானேற்
பொய்த விர்ந்திவர்க் குறுதமிழ் நசையெவர் புகல்வார். (உ௬)

காண்ட குந்தமிழ்த் தென்னவர் மூன்றுசங் கமும்வைத்
தாண்டு வந்தனர் நேரியர் வில்லவ ராங்காங்
கீண்டு நாவலர்க் கெண்ணிய வளனெலா மீந்து
நீண்ட கீர்த்திய ராயின ருலகெலா நிலவ. (உ௭)

இந்த வாறிரு மன்னரும் புலவர்சீ ரேற்றி
வந்த தொன்றுகொ றெள்ளிய ராகிநூல் வகுத்து
மந்த மில்பல புலவர்சொல் கவிகளை யாய்ந்து
கந்த ரத்தொகுப் பிற்றியுங் காத்தனர் துலங்க. (உ௮)

---

உ௫-கலிங்கத்துப்பரணி-இராசபாரம்பரியம், உ௩-ஆங்கவியினும், புறநானூறு-௫அ-ஆங்கவியினும், முறையே தமிழ்க்கூடல், தமிழ்கெழுகூடல் எனக்கூறுமாறுகாண்க.

உ௬ தேம்-தேயம், சூள்-சபதம்; இதனைப்புறநானூறு ௭௨-ஆஞ்செய்யுளிற் காண்க.

செங்க ணானெனுஞ் சோழனோர் சேரனைச் சிறையிற்
றங்க வைத்துழிப் பொய்கையார் களவழி சாற்ற
வங்க கங்களித் தவன்சிறை நீக்கின னம்மா
துங்க நாவலர் திறத்திவர் மதிப்பையென் சொல்வாம். (உசு)

இன்னு மெத்தனை யெத்தனை யற்புத மியற்றி
மன்னி வாழ்ந்தனர் நாவலர் முற்றவும் வழுத்தப்
பன்ன காதிபன் றனுமுஞ் சலிப்புறும் பண்பார்
தென்ன ராதியர் மூவருங் காலத்தாற் சென்றார். (ஙய)

சங்க மென்பது தீர்கினுந் தமிழ்நிலஞ் சார்ந்தங்
கங்கு வாழ்வுறு குறுநில வேந்தரு மன்பு
பொங்கு வேளிரும் புலவர்பா லன்பொடு பொலிந்து
துங்க மெண்ணில புரிந்துவந் தனர்களு டோறும். (ஙக)

இன்ன வாறுதென் றமிழ்வளர்த் திடுதலா லிவரை
முன்னை மூவரா முடியுடை வேந்தரின் முதன்மை
மன்ன நாவல ரேத்துவார் வழங்கிடு வள்ள
லென்னு நாமமு மீந்தனர் பலகவி யிசைத்தே. (ஙஉ)

பின்பு தோன்றிய சைனரும் பௌத்தரும் பிறழா
வன்பு தோன்றநந் தமிழ்மொழி வளர்ப்பவ ராகு
ரென்பு கன்றிட விலக்கிய விலக்கணம் புராணம்
வன்பு கண்டிடு வாதங்காப் பியம்பல வகுத்தார். (ஙங)

இவர்க்கு முன்னரும் பின்னரு மிடையினு மீண்டித்
தவத்தி றங்கொளுஞ் சைவவை ணவமெனுஞ் சமயத்
துவக்கு நாயன்மா ருலப்பிலாழ் வாரென வுற்றோர்
கவிப்பெ ருக்கினாற் றமிழ்ப்பயிர் வளர்ந்ததெங் கணுமே. (ஙச)

இத்தி றத்தினி லாண்டுபற் பலதமி ழெவனு
மெய்த்தி ருத்தமுற் றிலகிய திவ்வயின் மேவிக்
கைத்த லத்தவாள் வலியினர் காவல ராகி
மொய்த்தி ருத்தனர் பற்பலர் தமிழ்மண மோவார். (ஙரு)

உசு-இதன் கதை களவழியினும், புறநானூறு எச-ஆங்கவியினுங் காண்க.

தாயி ழந்ததா லலமரு மகவெனச் சாம்பி
நோயு ழந்தெவர் புரப்பரென் றகமிக நொந்து
தீயு ழந்தகான் கலையெனத் திசைதொறுஞ் சென்று
வாயி ழந்தனர் மதியிழந் தனர்கவி வாணர். (௩௬)

பாடு கென்றுரைப் பவரிலை பண்டைநூற் பொருளை
நாடு கென்றுரைப் பவரிலை நவில்கினு முவந்து
கூடி நின்றுகேட் பவரிலை தமிழ்நிலை குலைய
வாடி நொந்தனர் மருண்டனர் தெருண்டசொல் வாணர். (௩௭)

இமிழ்பு னற்றட வளங்கெழு மும்மைநாட் டிசைநீர்க்
குமிழி யொத்ததாஞ் செல்வமீக் கொண்டவர் குழாத்துட்
டமிழ்வி ருப்பினு ரெவரெனத் தலைந்தலை சார்ந்தே
யமிழ்த மொத்தபாச் சொற்றலைந் துளம்புகைந் தயர்ந்தார். (௩௮)

ஆத வத்தில்வா டினர்க்குறு காவென வகில
மோது கோமுத்தி முதற்பலா தினத்த ருதவி
மீது றச்செய்து பற்பனூல் விளைத்தனர் விரும்பித்
தீதி லன்னவர் போற்பெருஞ் சிருறத் திகழ்ந்தார். (௩௯)

## நான்காஞ் சங்கம்.

———:o:———

சீர்மி குத்துள தென்றமிழ் வழுதியர் தேத்துப்
பூர்வ திக்கினிற் பூர்வமே பூர்வமா மதிபோற்
பேர்ப டைத்ததொண் டியந்துறை காவலர் பிறழாக்
கார்ப டைத்தகைக் கரந்தையர் தலைவர்சொற் கையார் (௪0)

ஏழு யர்ந்துள கயமுதற் படைகளோ டெய்தி
வாழி நேரியர்க் குறுதுணை புரிந்துவெல் வகையாற்
சோழ மண்டல பிரதிட்டா பகரெனுஞ் சொன்னீர்
சூழ மண்டலந் துலங்குறக் கொண்டமர் தொல்லோர். (௪௧)

௩௬. வாய்-வாக்கு, ஆகுபெயர்.
௩௯. ஆதவம்-வெயில்.

விதியி னுலுயர் சேதுநீ ராடியே மீள்வோர்க்
கதிக மாநலஞ் செய்திடை யூறனு காமே
திதிபு ரிந்திடு செய்கையாற் புவியெலாஞ் சேது
பதிக ளென்றெடுத் தேத்திடப் பெறுபரம் பரையார். (சஉ)

அம்பு நாட்டுவில் லெடுத்தமர் தொடுத்துவென் றுத்தி
வம்பு நாட்டுதோட் சென்னிநாட் டிருந்துமேல் வனையு
நிம்ப னாட்டுவந் துறைதலா லிவரையிந் நிலத்தோர்
செம்பி நாட்டுமீ ளியரெனச் சொலப்பெருஞ் சிறப்பார். (சங)

மாற்ற லர்க்கொரு கூற்றெனும் வளரிமாப் படையார்
போற்றி டாதவர் சென்னிதம் பதமிசைப் பூணு
மாற்றல் காட்டுசே மத்தலைக் கழலினு ரருளே
யேற்ற வாரியர் மானங்காத் தோரெனு மிசையார். (சச)

அடைய லார்த்தெறும் வீரமே வியதுபோ லச்செங்
குடைசெங் காவியங் கொடியினர் கொடையினும் புகழ்போன்
மிடைபு முல்லையந் தாரினர் பரிகரி வியன்றேர்ப்
படைப தாதிவேல் வாள்கணை வயமலி பண்பார். (சரு)

புணையிற் போய்ப்பொரு தீழமியாழ்ப் பாணமும் போற்ற
வினையில் வெற்றிகொண் டெய்திய திறலினு ரியற்பே
ரனைய வேரகு நாதசே துபதியென் றமைத்தோர்
வினைய ளாங்கவிக் கொடிகரு டக்கொடி மிக்கோர். (சசா)

வேறு.

விறுமெம் மதத்துண்மை விளக்கநோக் குநரெவருஞ்
சீறுநூ லெனநூல்செய் திறனுமறுப் புலவர்வழி
மாறுமற் பாமணக்க வழுத்துசவ்வா துக்கவிச்சீர்
தேறுநல் லூராதி சிறப்பவுத வியசெல்வர். (சஎ)

---

சஉ. திதி-காவல்.

சங. நிம்பன்-வேப்பமாலையைத்தரித்த பாண்டியன்.

சஎ. ஆதி என்றதனால், சுவாத்தன், வண்ணவயல்முதலானவையெனக

தேனூறு சுவைகொழிக்குந் தேமொழிபா லொருதுறையி
னானூறு பாக்கோவை நவிலமுத கவிமகிழ
வானூரைந் தருபுயலான் வள்ளன்மன மிகவெள்க
நானூறு பொற்றேங்காய் நவமணியை வைத்தளித் தோர். (சஅ)

வேறு.

ஆதிமி குந்தமிழ்த் தொல்குடி மரபினிற் றோன்றி
மதிமி குத்துரன் னிதிமிக மல்குமிச் சேது
பதிக ளாகிய கற்பக தருக்களைப் பார்த்துக்
கதிகி டைத்ததென் றமர்ந்தன கல்விமான் கணமே. (சகூ)

நாடொ றும்பல புலவரும் போந்துபா நவிலக்
கூடு மன்பொடு விதிபுளி யேற்றகங் குளிர்ந்தே
யோடை மால்கரி விளைநக ராதியீந் துவப்பி
னீடி வாழ்ந்தனர் சேதுகா வலரெனு நிருபர். (ருய)

துறைசை யம்பதி வளர்சைவ குரவராந் தூயோர்
நிறைசெ ழுந்தமிழ் வளர்த்தலை நோக்கியுண் ணெகிழ்ந்து
குறைவி லாதபல் வளநகர் தானமாக் கொடுத்தோர்
பிறைத விர்ந்தது தமிழ்மொழி பண்டுபோல் விளங்கி. (ருக)

நலத்த முத்தமிழ்ப் பயிர்க்குமா மழையென நண்ணிப்
புலத்தி னாடொறும் வளர்க்குமிப் புரவலர் புனிதக்
குலத்தி னோரெலா மித்தொழி றலைமையாக் கொண்டார்
வலத்தி னோங்குசொல் லுழவரு மகிழ்வொடு வாழ்ந்தார். (ருஉ)

வேறு.

இன்னவகை தமிழ்வளர்க்கு மிவர்மரபி னொருவீரன்
மன்னர்மணி முடியுழுத வார்கழற்கால் வயவேந்த
னென்னருங்கண் டதிசயிக்கு மெழிலுடையான் மிளிர்படையான்
றென்னன்முத்து ராமலிங்க சேதுபதி மகராசன். (ருங)

---

ருக. பிறை-நடுக்கம்,
ருஉ. புலம்-அறிவு.

கல்வியினாற் சேடனுக்குங் கருணைநிறை வாற்கடற்கும்
வில்வலியாற் பற்குனற்கு மெய்யழகாற் சித்தசற்கு
மல்வலியால் வீமனுக்கு மனக்கலக்கந் தருமுரவோன்
செல்வமெலா மொருங்கெய்தித் திகழ்ந்தபெருந் தகைநிருபன். (ருச)

சேதுபதி மன்னவர் சிகாமணிகோ னிறையனைய
நீதிபதி நிபிடகவி நிகழ்த்துபதி நெடும்புலவோ
ராதிபதி சிங்காச னாதிபதி முகவையெனு
வோதுபதி யிடைமேவி யொளிதிகழ்பூ பதியானோன். (ருரு)

அரசுபுரி தருநாளி லவன்பிறப்பு முறையினுக்கும்
பரசுசெழுங் கோலோச்சிப் பார்புரக்கு முறையினுக்கும்
விரவுதனித் துணையாகி விளங்கியவ னிருகோட்டுப்
புரசைமத கரிபோல்வான் புண்ணியபத்தி னுருவானோன். (ருசா)

மாமதிசூழ் சுமுகத்தான் மன்னவர்சூழ் சமுகத்தான்
காமருவு செங்கையினான் கவினுமலர் மங்கையினான்
பூமருவு புயமுடையான் புகலரிபோற் பொன்னுடையான்
றேமுறுவி நயமொழியான் றினம்புரியு நயமொழியான். (ருஎ)

திருமகனே திருவைமனாந் திருந்தவனே திருமகளின்
மருமகனே புட்பகத்தின் வருமகனே வயங்கெழுமைந்
தருமகனே தசரதனார் தருமகனே யெனமடவார்
வருமகனே வாநசையான் மயங்குபெரு வடிவழகன். (ருஅ)

கற்பகமுஞ் சுரரானுங் கருமுகிலு மறுமருவாப்
பொற்பமர்சிந் தாமணியும் புண்ணியஞ்செய் தோருருவா
யற்பினுடன் புவியினில்வந் தருளினா லனகொடையான்
பற்பகலா வருங்கலைகள் பயிலும்விளை யாட்டுடையான். (ருகூ)

கம்பனுங்கண் டுளமயங்கிக் கம்பனென நிற்கும்வகை
வம்புகம ழமுதென்ன வளச்சொல்லும் பொருட்பொலிவும்

---

ருச. மல்-மற்போர்.
ருஎ. பொன்னுடை-பீதாம்பரம்.
ருஅ. புட்பகம்-குபேரன் விமானம். அகம்-அகன் எனப்போலியாயிற்று.
சுய. கம்பன்-பின்னது நடுக்கமுடையவனென்க.

பம்பியகற் பனைச்சுவையும் பல்குகவி பலபகர்வோ
னும்பர்பிரா னெனப்புலவ ருறுமவையி னொளிர்பெரியோன். (சுய)

இருநிதியு மோருருவ மெய்தியிவ ணடுத்தின்பம்
புரிவதெனு முண்மையினைப் புவிவிளக்கும் படியாகப்
பெரியவறி வினர்பொன்னுச் சாமியெனப் பெயர்பெற்றோன்
றிருவன்முத்து ராமலிங்க செம்மலுடன் முறைசெயுநாள். (சுக)

மிக்கதொன் னூற் பலபணிகள் வியக்கும்வகை புதுக்குவித்துந்
தக்கபுதுக் கவிப்பணிக டான்புரிந்தும் புரிவித்துந்
தெக்கணத்துத் தமிழ்த்தேவி சிறப்பவணி யுடனெவனும்
புக்குலவிப் பவனிவரப் புனைவித்தும் புகழ்பூண்டோன். (சுஉ)

அறந்தழைப்பத் தமிழ்தழைப்ப வருடழைப்பத் தெருடழைப்பச்
சிறந்தமுத்து ராமலிங்க சேதுபதி செயுந்தவத்தாற்
கறந்தசெழும் பாலனைய கரங்குலவு மிளங்கதிர்போற்
பிறந்தனனோர் குமரனவன் பெருமையெவர் பேசாரே. (சுங)

பவப்பனியும் புலவர்கலிப் பகையிருளும் பயந்தொளிப்பத்
தவச்சலசச் செழுமலருந் தமிழ்மாதி னகமலரு
முவப்புடனே விரிந்திலங்க வுதித்தசுதன் சிறப்பனைத்து
மெவர்க்குமறி வுறுத்தும்வகை யிசைத்தனர்பாற் கரனெனும்பேர்.

ஆங்கிலமு மாரியமு மாந்திரமுங் கறியினமா
வோங்கியசெந் தமிழமுதை யுட்கொண்டு வளர்வுற்றான்
வீங்கியபூப் புயந்தாங்கி விண்ணவரு மண்ணவரு
பாங்குறச்செய் தான்முறையப் பாற்கரபூ பதியம்மா. (சுரு)

குடமுனியோ வவன்பானூல் கொண்டமர்தொல் காப்பியனோ
படமுடைய பணியிறையோ பாரதம்பா டியதவனோ
மிடலுறுமன் னவன்கல்வி விளம்புவதென் னெனவியப்பக்
கடலமுதப் பெருக்கென்னக் கவிப்பிரசங் கம்புரிவான். (சுசு)

இரவலராய் முற்கணத்தி னெய்தினோர் பிற்கணத்திற்
புரவலராப் பொலியும்வகை புரிகின்ற பெருங்கொடையான்

விரவலரா யினும்புகலு றென்மொழியால் வசமாக்குங்
கரவலரா மெய்யனுயர் கருணைநிறை கண்ணுடையான். (சுஎ)

மாதவனோர் காலளந்தமாண்பினதென் றொருசிலர்சொல்
பூதலமெல் லாந்தனது புகழளக்கப் புரியுரவோன்
மேதகுமித் தமிழ்நாட்டு வேந்தர்சிகா மணியாகி
நீதிமுறை புரிகாளி னிகழ்த்துமிவற் குறுதுணையாய். (சுஅ)

தண்டமிழ்க்கா வலன்பொன்னுச் சாமிநரேந் திரன்றவத்தா
லெண்டிசையுங் கொண்டாட விலங்குவலம் புரிமணிபோற்
திண்டிறற்சந் ததியாகச் செனித்துவளர் மதிபோன்றான்
கண்டவர்போற் கேட்டவருங் களிப்பெய்து நன்னடையான். (சுகூ)

நேயமுடன் றமிழ்வளர்த்து நிலவுலகெல் லாம்புரத்தற்
காயவனுக் கிரபாண்டி யத்துரையாம் பெயர்பெற்றான்
றூயனைய தண்ணளியான் சலசமலர்த் துணைமீது
மேயமட வார்மகிழ்ந்து விளையாடு மிடமானான். (எய)

இவன்றந்தை யென்னோற்றான் கொல்லெனுஞ்சொல் லெனுமொழிக்
நவந்தங்கு மிலக்கியமா னண்ணுபெரும் புகழ்க்குரிசில் [கு
பவந்தங்கு மென்போல்வார் பகர்போலிப் பாக்களையு
முவந்தன்பு பாராட்டு முத்தமசற் குணசீலன். (எக)

இன்னுயிரா யினும்பிறருக் கீவதற்கே யுளதென்ன
மன்னுமனத் தயையுடையான் வாய்மைநிலை வழுவாதா
னென்னலருந் திசைநோக்கி யுள்ளமுறத் தொழுந்தகையான்
சொன்னலங்கே ளாரும்வெள்கச் சொல்லுமுயர் சுகமொழியான்.

பிரசங்கம் பொழிந்தெனப்பல் பிரசங்கம் பொழிவாயா
னரசங்க மாமமைச்சு மணிகுடியும் படைமுதற்றா
வரசங்க மங்களெலாம் வளம்பல்கப் பேரருளா
கரசங்க பாணியெனக் காசினிகா வலனானான். (எங)

---

எக. முதலடியில், மகன்றந்தையென்னு முதற்குறிப்புடைய திருக்குறளின் கருத்தை யெடுத்துக் கூறினது காண்க.

எங. பிரசம்-தேன். கம்-மேகம்.

தெள்ளமுதச் சுவைதுளிப்பச் செய்யுள்பல செயுந்திறலா
னுள்ளமுத லுடலாவி யொருங்கறத்துக் காகவென்பான்
பள்ளமுத கம்புகல்போற் பாவலரைத் தேடியன்னார்
கொள்ளமுதன் மையுந்திருவுங் கொடுத்துவக்குங் குணக்குரிசில்.

துறைதோறுங் கொழித்தெடுத்த தூமணிகோத் தளித்தாங்கு
நிறைவாம்பல் கலைக்கடலி னெஞ்சமுத்தி நீதிமுறை
யறைபாடற் கோவைபுரிந் ததன்பெயர்பன் னூற்றிரட்டென்
றிறைபிறழா தச்சியைத்த விலக்கியநல் லுபகாரி. (எரு)

எச்சமயத் தவருமுவந் தேற்கமுன்னர் நீதிபுகல்
பொச்சமில்பன் னூற்றிரட்டைப் புரிந்துதவித் தன்சைவம்
வைச்சபொருள் வகைப்படுத்தி மலிசைவ மஞ்சரியை
யச்சிலிபைத் துள்ளன்பை யலங்கரித்து வளர்வித்தோன். (எசு)

விண்ணிலிருந் தீரெட்டு வியன்கலைகொண் டமுதளிக்கும்
பண்ணவன்முத் தமிழ்பெற்ற பாக்கியத்தின் வடிவாகி
மண்ணிடைவந் தெட்டெட்டு வளர்கலைகொண் டமுதாதி
யெண்ணியவெப் பொருளுமளித் திலங்கியாங் கினிதுறைவான்.

பூவேந்த னென்றேவிப் புவிபுகல நீதிசெய்வோன்
பாவேந்த னெனக்கவிஞர் பகரவருங் கவிபகர்வோன்
றேவேந்த னெனவுலகஞ் செப்பவளர் பெருஞ்செல்வ
னாவேந்த னெனவவையோர் நவிலநிறை சொல்வலியான். (எஅ)

நல்லாற்றுப் பாய்ச்சிகடற் பாய்ச்சியெனு வாயமரில்
வல்லாற்றுப் பொருமரபின் வரலாற்றாத் துக்குடியிற்
பல்லாற்றுந் திகழ்நாவாய் பயில்சங்கத் தலைமையுள்ளோன்
சொல்லாற்று நாவாய்ச்சீர் துலங்கவுளா னிவனன்றே. (எகூ)

சென்னைசே லந்திருப்பா திரிப்புலியூர் தஞ்சைகட
றன்னுதிரு மந்திரவூர் தூயதமிழ்த் தென்கூட

---

எச. உதகம். நீர்.

எசு. பொச்சம்-குற்றம்.

அ0-திருமந்திரவூர்-தூத்துக்குடி.

வின்னுமுள பன்னகரி லிலங்குசபை யினர்வேண்ட
வண்ணையினுந் தயையொடுபோந் தக்கிரா சனம்வகித்தோன். (அக)

மிக்கபெருந் திருவாலும் வியத்தகுநல் லுருவாலுந்
தொக்கபல கலையாலுந் தூயமன நிலையாலுந்
தக்கவழி தரலாலுந் தனக்குநிகர் தானானே
னுக்கிரபாண் டியன்முன்னா ளானிவனென் றுணர்வித்தோன்.

இன்னதனிக் குடைவேந்த னியலுணர்நா வலர்பலருந்
துன்னநடு வீற்றிருந்து தூயதமி ழாய்வுறுங்கா
லென்னசொல்வே னொருமூன்று மியற்சங்க நிலைகுலைந்த
பின்னதனை நிலைநிறுத்தும் பெற்றியவ ருற்றிலரோ. (அஉ)

தமிழ்நாடுந் திருமதுரைத் தமிழ்நகருந் தமிழ்மொழியுந்
தமிழ்நாடு நாவலருந் தழைத்திருந்து மரசுரிமை
தமிழ்நாடா வேற்றரசர் தாங்கியதாற் பலபாங்கர்
தமிழ்நாடோ றுங்குறையத் தலைப்பட்ட தழங்கியதே. (அங)

ஆங்கிலத்தா ராட்சியினா லரியதமிழ் நிலைகுலைய
நாங்கிலவ ராகுவது நடுவன்றே வடுவன்றே
பாங்கிலவர் மொழிபரப்பும் பண்பறிந்தும் பரிவின்றித்
தூங்கிலவ மானமன்றோ சுதேசமொழித் தாய்க்கெனவே. (அச)

எம்மதமுஞ் சம்மதமென் றேற்றருளுந் தமிழணங்கைச்
செம்மையுற வலங்கரித்துத் திருந்துசங்கம் பொருந்தும்வகை
யிம்மெனுமுன் னியற்றுகிற்பே னியற்புலவீ ரெல்லீரும்
வம்மெனவன் பாற்சாற்றி மாமதுரை நகரடைந்தான். (அரு)

வேறு.

கூட லம்பதி யுக்கிர பாண்டிய கோமா
னாடி வந்ததை யுணர்தலு முளமிக நயந்து

---

அச. இலவர்-அற்பர்.
அரு. வம்-வாரும்.

நீடு வண்புகழ்ப் பாற்கர நிருபனு நினைந்து
பாடு நுண்டமிழ்ப் புலவரு மெய்தினர் பரிவால். (அசு)

கன்னி நாட்டினும் வில்லவ னாட்டினுங் கமழ்நீர்ச்
சென்னி நாட்டினுந் தொண்டைநன் னாட்டினுஞ் செறிந்து
மன்னு நாவல ரெவருநம் மதுரையில் வந்து
துன்னி னாரிழுந் தகைப்பெறுஞ் சமையமியார் துறப்பார். (அஎ)

அமிழ்த வூற்றுழி யடுத்துக்கை கொடுத்துநன் றூற்று
மிமிழ்க விக்கொடி யுக்கிர பாண்டிய விறையை
யமிழ்த மைக்குநா ளரியினைப் புலவர் சூழ்ந் தாங்குத்
தமிழ்த மைக்குநா ளிதுவெனப் புலவர்கள் சார்ந்தார். (அஅ)

நகர வாசிக ளிஃதறிந் துளமிக நயந்து
ககன மீதெழு காவண முதலலங் கார
நிகரி லாவகை புரிந்தெதிர் போந்துவெண் ணிலாமுன்
மகர வேலையொத் தார்த்தனர் சூழ்ந்திரு மருங்கும். (அகூ)

தனித்த மிழ்ச்சுவை வளருநா ளிதுவெனத் தமிழ்போ
லினித்த சொல்லின ரெழின்முக மலர்ச்சிய ரின்பஞ்
செனித்த சிந்தையர் திரண்டெழு புயத்தினர் செறிந்த
மனித்த ராயின ரிவர்களிப் பெவருரை வரைத்தே. (கூ௰)

வந்தி யாவரு மோருழிக் குழீஇத்தமிழ் மகள்சீர்
முந்து சங்கமோர் மூன்றினும் விளங்கிய முறைமை
யந்தி லன்பொடு பேசினர் பண்டுபோ லாற்றுஞ்
சிந்தை கொண்டபாண் டித்துரை யறிவினைத் தேர்ந்தே. (கூக)

## வேறு.

முன்னாளிற் கடைச்சங்க முடிவடைந்த துலகாண்ட
மன்னுகு முக்கிரபாண் டியனிடத்தம் மாண்பாலே

---

அஅ. இமிழ்தல்-ஒலித்தல். அரி-திருமால்.

கூக. அந்தில்-அவ்விடம்.

யிந்நாளி லுக்கிரபாண் டியனென்னு மெழில்வேந்தன்
றன்னாற்பெற் றனமதுரைத் தமிழ்ச்சங்க மெனப்புகன்றார். (கூஉ)

தோன்றிருந்த தமிழ்ச்சங்கஞ் சொற்புலவர் துழனியொன்றை
நன்றடைந்த தங்கமெண நம்மதுரைத் தமிழ்ச்சங்க
மென்றுமெழு வகையங்க மியைகெனவித் துவக்கழகந்
தென்றமிழ்சேர் சேதுபதி செந்தமிழ்க்க லாசாலை. (கூங)

பாண்டியன்புத் தகசாலை பற்றுமொன்றைப் பலவாக்கி
யீண்டுமுத்தி ராசாலை யியற்றமிழி னிசையாலே
தேண்டியடைந் துலகுவக்குஞ் செந்தமிழ்ப்பத் திரிகைநிலை
காண்டகுநற் றமிழ்ப்பரீக் கைதொன்னூ லாராய்ச்சி. (கூச)

என்னுமெழு வகைத்தாக்கி யிவற்றினுக்கெல் லாந்தலைமை
மன்னியிருந் தருந்தமிழை வளர்மதிபோல் வளர்விப்பான்
றன்னுபெரும் புகழ்ப்பாண்டித் துரையெனும்பேர்ச் சுகோதயனை
யன்னவக்கி ராசனத்தி னதிபதியா யமைத்தனரால். (கூரு)

சங்கத்துப் பெருந்தலைமை தாங்கிவல மோங்கிவளர்
சிங்கத்துக் கிணையான திறற்பாண்டித் துரைப்பூமான்
றுங்கப்பன் னூலறிந்த துகளறுவித் துவக்கழக
வங்கத்துக் குரியாரை யாய்ந்துதொகுப் பானமைந்தான். (கூசா)

## வேறு.

தொல்லைவளம் படைத்ததிரி சிரபுரத்துத் தோன்றுபுகழ் மீனாட்சி சுந்தரப்பேர், வல்லபெருந் தகைமாட்டுப் பன்னூலாய்ந்து வளர் சங்க நூல்கள்பல வணிந்தஞ்சேற்றி, யெல்லவருங் கொண்டாடும் வண்ணமேனாட் டிறைவர்மகா மகோபாத்தி யாயப்பட்ட, மொல்லைதரத்தமிழரசி முதற்சேயாகி யொளிர்சாமி நாதப்பே ருறுமேலோனை.

தண்டமிழ்க்குத் தாயாகிப் பலபுராணந் தகையபல பிரபந்தம் வசனநூல்க, ளெண்டரவே யியற்றியுல குவப்பத்தந்திட் டெத்திசையும் புகழ்நிறுவி யாலவாயிற், பண்டனைய தமிழ்ச்சங்கப் புலவராற்று

கூசு. தேண்டி-தேடி.

ப்படையோதிப் பெரியவிறல் படைத்து நாளும், வண்டமரும் பொழிலுடுத்த நாகூர்வாழ்க்கை மருவுகுலாம்காதிறுநாவலவன் றன்னை. ()

வேறு.

நவமாகு நூல்கள்செய்வோ ருரையிடுவோர் போதகத்தை நாடிச் செய்வோர், புவனமிசைத் தொன்னூலைப் புதுக்குவிப்போ ரொன்னும்பல் புலவர் தம்மைத், தவமெலாங் கூடலுறு கூடலெனும் பதி நான்காந் தமிழ்ச்சங் கத்துக், கவரவர்தந் தகைக்கேற்ப வுபசரித்தங் கத்தினரா யமையச் செய்து. (௯௯)

சேதுபதி செந்தமிழ்க்க லாசாலை பயில்வார்க்குத் தினமு நெஞ்சத், தாதரங்கூ ரன்னை தந்தை போலுண்டி யுடைமுதலா வமையத் தந்து, மேதகுபல் லிலக்கியமு மிலக்கணமும் பிறநூலும் வியன்றென் சொல்லி, லோதுவித்து வடமொழியு முணர்வித்துப் போதகரா லோங்கச் செய்து. (௱)

வேண்டியடுத் தவரெவர்க்கு மெந்நூலு மெடுத்தெடுத்து விரித்துக் காட்டி, யீண்டிருத்திர் படித்திரென வியம்பும்வகை கரவெழுத்தி லிலங்கு மச்சிற், காண்டகுபன் மொழிநூலுங் கண்டுதொகுத் துறுபாது காப்பி லங்கப், பாண்டியன்புத் தகசாலை தனிலறிஞர் தமக்குவகை பல்கச் செய்து. (௱௧)

மிக்கபனைப் பத்திரத்தில் வரைந்தபன்னூ லுஞ்செல்லால் விளியா வண்ணம், மெக்கணத்து மொன்றுபல்லா யிரமாகும் படியெழுதா வெழுத்திற் றாமந், தொக்கியக்கு மியந்திரமு முறைமைதவ றுதுபல தொழில்செய் வாருந், தக்கதமிழ்ச் சங்கமுத்தி ராசாலை தனிலென்றுந் தழைப்பச் செய்து. (௱௨)

உயிர்க்குறுதி மிகப்பயக்குந் தமிழ்ப்புணரி யிடைமூழ்கி யுயர்நாவல்லோ, ரயர்ப்படையா தெடுத்தினிது விளக்குபொருண் மணியமைந்திவ் வவனி மீதிற், செயற்கரிய செயல்காட்டுஞ் செந்தமிழ்ப்பத்திரிகையெந்தத் தேத்துள்ளாரு, மயக்ககலப் பெற்றுவா சிக்கவதை மதிதோறும் வயங்கச் செய்து. (௱௩)

---

௱-ஆதரம்-அன்பு.
௱௨-செல்-கறையான். விளிதல்-கெடுதல்.

ஆங்கிலத்தின் றுணையாகத் தமிழ்பயில்வார் தமைத்தமிழே யாய்ந்து மேலாம், பாங்குபெறப் பயில்வாரை விளித்தனையார் படிப்பினெல்லை பார்ப்பான் வேண்டி, யோங்குவினை நிகழ்த்திடச்செய் துரைத்தவிடை யறிந்தவற்றை யுரைத்தார்க் கெல்லா, மீங்குலக ரறியும்வகை பொற்பதக்க முதலியபல் வேற்கத் தந்தே. (௩௪)

பிரவேச பண்டிதரே யுயர்பால பண்டிதரோ பெரிய கல்வி, யுமேவு பண்டிதரே யெனும்பட்ட மவரவர்தம் முடைய கல்வித், தரநாடி யேற்கும்வகை கொடுத்தாண்டு தோறுநலந் தழைக்க வாற்றி, வரலாவ தமிழ்ப்பரிக் கையுமெவருங் கொண்டாடும் வகையிற்செய்து.

பிரியமுறு மிலேமறைகா பெனவெவ்வெவா ரிடத்துமிது பெட்பாற்றேடித், தெரியும்வகை மறைப்புண்டு வதிதருநன் பொருள்வகையைச் சேதனத்தா, லரியவழி யாய்ந்தெடுத்தே யினிக்கற்போ ரிடர்ப்படா துவப்பச் செட்வா, லரியநலந் தருதொன்னூ லாராய்ச்சி புலவருட னமைச் செய்து. (௩௬)

இந்தவகை யேழங்கத் தொவ்வொன்று நனிசிறப்பி னிலங்க வாற்றி, வந்துறுவற் சரந்தோறு முற்சவங்கொண் டாடுதற்கு மாநா வல்லோர், சந்தமுறு குழாஞ்சேர்த்துப் பிரசங்கம் புரிவித்துத் தமிழைப் போற்றி, யுந்துபுக ழறங்கொண்டா னுக்கிரபாண் டியனென்னு முயர்கோ மானே. (௩௭)

இன்னவகை யிவன்வளர்க்குந் திறனறிந்து பாற்கரப்பே ரெய்துஞ் சேது, மன்னவன்றே வத்தான வகைதன்ம வகைப்பொருளின் மன்னு தன்பேர், துன்னுகலா சாலைக்கு மதிதோறும் வேண்டுமட்டுத் துய்க்கச் செய்தா, னென்னவிப் பிரவிமதி யுள்ளளவு நடைபெறுஞ்சி றிதுவே யன்றே. (௩௮)

மதுக்கோட்டை விட்டகலா மலருதவப் பொதுளாரா மந்தானேங்கி, விதுக்கோட்டை வரவளர்ந்து மிளிருநவ முடையதென வியக்குஞ் சீர்சால், புதுக்கோட்டை மகராசன் மனமகிழ்ந்தை யாயிர

---

௩௬-சேதனம்-அறிவு.
௩௯-கோட்டைவிட்டு—கொம்பை நீக்கி, பொதுளல்-நெருங்கல், விதுக்கோட்டைவர-சந்திரனணுகிய கோள்தடவ, பொதுக்கோட்டை விகத்தமிழ்-பொதுக்கொள்கையதாகிய தெய்வத் தன்மையையுடைய தமிழ்.

வென் பொன்னிந் தலைப். பொதுக்கோட்டை விகத்தமிழைப் புவி பொருந்த லமைத்துப் புகழார் யாரே. (௱௯)

இத்தன்மைபோ மதிக்கரு மைம்பதுலென் பொற்கிழ பக்கின் றூறு, ஒத்தமராத் திகழ்காட்டுக் கோட்டைநக ரத்தாரு முதவா நின்றார், சித்தமகிழ் வரற்றலைவன் கோட்டைதிருப் புகழ்ப்பேரை சேறை சிங்கை, மெத்துபுகழ்க் காவலரு முதவுகின்ற ரிதற்குதவார் விளை ரன்றே. (௱௰)

வேறு.

திருவனந்த புரங்கொச்சி மைசூ ராதி தேசமன்னர் பலருந்தவி செய்யா நின்று, ரிருநிலமுள் ளளவுமிது விளக்க மேவு மெங்காளு மொருகுறையு மெய்தா தென்றே, பெருமையுடன் புவிபுகழிந் நான்காஞ் சங்கம் பெற்றபுக ழத்தனையும் பிறழாவாய்மை, மருவுமெங்க ளுக்கிர பாண் டியற்கே யாக வாய்ந்ததமிழ்த் தேவியருள் வாழி வாழி.(௱௰௧)

ஆகச்செய்யுள் ௱௰௧.

மதுரைத் தமிழ்ச் சங்க மான்மியம்

முற்றிற்று.

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,
சென்னை-600090.

302